# இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கை

செப்டம்பர் - 2017



தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு

# இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கை

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு

*“தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதில் நாம் முன்னணியிலுள்ளோம். ஆயினும், சிறுவர் தொழிலற்ற வேலைச் சூழலை உருவாக்குவதற்கு, சிறுவர் தொழிலைச் சகித்துக்கொள்ளும் நிலைமையைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கான உறுதியான தீர்மானத்துடன், இன்னோர் அடியை முன்வைக்க வேண்டியுள்ளது. இந்தக் கொள்கையானது இவ்விடயத்தில் எம்மை உந்தித் தள்ளுவதுடன், அதன் பெறுபேற்றைத் தக்கவைப்பதற்கும் உதவும்.”*

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
## மேதகு ஜனாதிபதி அவர்களின் செய்தி

தேசம் என்ற வகையில், கல்வி, சுகாதாரக் கவனிப்பு, பாதுகாப்பு ஆகியன உள்ளிட்ட ஒவ்வொரு விடயத்திலும் சிறுவருக்கு உரிய சூழலை வழங்குவதற்கு நாம் கட்டுப்பட்டுள்ளோம். 'சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கை' சிறுவர் தொழிலை, அதன் மோசமான வடிவங்கள் உட்பட, நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் என்பதுடன், அதன் விளைவாக, சிறுவருக்கு உகந்த பாதுகாப்பான சூழலையும் உருவாக்கும். இக்கொள்கையானது கட்டாயக் கல்வி தொடர்பான கொள்கையுடன் ஒத்திசைந்திருப்பதுடன், எந்தவொரு சிறுவரும் கல்வியிலிருந்து விடுபடாதிருப்பதை உறுதிப்படுத்த உதவும்.

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு இந்தக் கொள்கையைத் தயாரித்திருப்பினும், சிறுவர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு பல்வேறு நிறுவனங்களையும் சார்ந்ததாகும். ஆகவே, தத்தமது நிகழ்ச்சித்திட்டங்களுள் இந்தக் கொள்கையைப் பயன்படுத்தி வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு உதவும்படி, நான் எல்லாப் பங்காளர்களையும் வேண்டிக்கொள்கிறேன். இது தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் உள்ளீர்க்கும் உபாயத்திலேயே தங்கியுள்ளது.

தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதில் நாம் முன்னணியிலுள்ளோம். ஆயினும், சிறுவர் தொழிலற்ற வேலைச் சூழலை உருவாக்குவதற்கு, சிறுவர் தொழிலைச் சகித்துக்கொள்ளும் நிலைமையைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கான உறுதியான தீர்மானத்துடன், இன்னோர் அடியை முன்வைக்க வேண்டியுள்ளது. இந்தக் கொள்கையானது இவ்விடயத்தில் எம்மை உந்தித் தள்ளுவதுடன், அதன் பெறுபேற்றைத் தக்கவைப்பதற்கும் உதவும்.

'பிள்ளைகளைப் பாதுகாப்போம்' என்னும் தேசிய வைபவத்தில் 'சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கை'யை வெளியிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்தக் கொள்கையை உருவாக்குவதில் உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

**மைத்திரிபால சிறிசேன**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி

*"சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களை சகித்துக்கொள்ளும் நிலைமையைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு இலங்கையில் கணிசமான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதனால் இலங்கை இவ்விடயத்தில் இந்தப் பிராந்தியத்தில் முன்னிலை வகிக்க முடியும்."*

## தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

## **கௌரவ. டபிள்யு. டி. ஜே. செனவிரத்ன அவர்களது செய்தி**

தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு "சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கை"யை வெளியிடுவது குறித்து நான் மிகவும் பெருமையடைகிறேன். சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களை முற்றிலுமாக இல்லாதொழிப்பதற்கு மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மற்றும் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஆகியோரது தலைமையின் கீழ் கடந்த இரு வருடங்களுள் எமது அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குவதே எமது நோக்கமாகும். சிறுவர் தொழிலிலிருந்து எமது சிறார்களைப் பாதுகாப்பதற்கு, எங்களுக்கு ஒரு பொதுவான கடப்பாடு உள்ளதுடன், நாம் அதற்காக ஒன்றிணைந்து செயலாற்றுதலும் வேண்டும்.

சிறுவர் தொழில் என்ற விடயத்தில், ஒரு நாடு என்ற வகையில், எமது முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். 2008/2009 இல் நடாத்தப்பட்ட சிறுவர் செயற்பாட்டு அளவீட்டுடன் ஒப்பிடும்போது, 2015/2016 இல் நடாத்தப்பட்ட சிறுவர் செயற்பாட்டு அளவீட்டின் பிரகாரம், இலங்கையில் சிறுவர் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறார்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய 60% ஆல் குறைந்துள்ளது. அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறார்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு குறைந்துள்ளது. சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களை சகித்துக்கொள்ளும் நிலைமையைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு இலங்கையில் கணிசமான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதனால் இலங்கை இவ்விடயத்தில் இந்தப் பிராந்தியத்தில் முன்னிலை வகிக்க முடியும்.

இந்தக் கொள்கையானது, பல்வேறு அரச நிறுவனங்களின் கூட்டு நடவடிக்கைகள் ஊடாக, சிறுவர் தொழிலை, அதன் மோசமான வடிவங்களுக்கு முன்னுரிமையளித்து, முடிவுறுத்தி அப்பெறுபேற்றை நிலைத்திருக்கச் செய்வதில் பங்களிப்பு வழங்க எமக்கு உதவும். தொழில் அமைச்சின் சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு இக்கொள்கையின் அமுலாக்கத்தை ஒருங்கிணைத்து மதிப்பீடு செய்வதற்கு அதிகாரமளிக்கப்படும். இந்தக் கொள்கையை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதில் தொழிற்சங்கங்களுடனும் தொழில்கொள்வோரது அமைப்புக்களுடனும் சேர்ந்து செயற்படுவதற்கும் நாம் எதிர்பார்க்கிறோம்.

சிறுவர் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தையும் தனியார்துறை நிறுவனங்களையும் வழிகாட்டுவதில் பாரிய உதவிகரமாக இந்தப் புதிய கொள்கை இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்தக் கொள்கையை உருவாக்குவதில் அயராது உழைத்த செயலாளர், அமைச்சின் முழுப் பதவியணியினர் மற்றும் சர்வதேச தொழில் தாபனம் ஆகியோரை நான் பாராட்டுகிறேன்.

**டபிள்யு. டி. ஜே. செனவிரத்ன**
தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

*“இந்தக் கொள்கையின் அமுலாக்கமானது, அதன் இலக்குகளை முழுமையாக அடையும் வரை தொடர்ந்து செல்லும் நடவடிக்கையாக அமையும்.”*

*“இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு எமது அர்ப்பணிப்பை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்துகிறேன்.”*

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்
## கௌரவ. ரவீந்திர சமரவீர அவர்களின் செய்தி

சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கை பிரசுரிக்கப்படுவது தொடர்பாக ஒரு வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மற்றும் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஆகியோரது தலைமையின் கீழ் அரசாங்கமானது, சிறுவர் தொழிலை இல்லாதொழித்து, அதன் பெறுபேறுகளை நிலைநிறுத்தும் இலக்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த உறுதிபூண்டுள்ளது. சிறுவர் தொழிலானது பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்துள்ளோம். தமது சிறிய பிள்ளைகளை விட்டுவிட்டு, தாய்மார் தொழில்தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும்போது குடும்பத்திற்கு ஏற்படும் சமூகப் பாதிப்பின் மீது கூடிய கவனம் தற்போது உள்ளது. இவ்வாறான பிள்ளைகள் பாடசாலைகளை விட்டு இடைவிலகி, சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கையானது, தமது குடும்பத்தினருடன் இல்லாது பாதுகாப்பற்ற நிலையில் வாழும் சிறுவர் குறித்து விசேட கவனஞ் செலுத்துகிறது.

இந்தக் கொள்கையின் அமுலாக்கமானது, அதன் இலக்குகளை முழுமையாக அடையும் வரை தொடர்ந்து செல்லும் நடவடிக்கையாக அமையும். இந்தக் கொள்கை காரணமாக, சிறுவர் தொழிலிலுள்ள 18 வயதுக்குக் குறைந்த, அதேவேளை அபாயகரமாக தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உட்பட, கிட்டத்தட்ட 50,000 பிள்ளைகள் நேரடியாகப் பயன்பெறுவர்.

இந்தக் கொள்கையை உருவாக்குவதில் தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர், கௌரவ. டபிள்யு. டி. ஜே. செனவிரத்ன அவர்களதும், அமைச்சின் செயலாளர் திரு. எஸ். ஏ. நிமல் சரணதிஸ்ஸ அவர்களதும், அமைச்சுப் பதவியணியினரதும், சர்வதேச தொழில் தாபனத்தினதும் முயற்சிகளுக்கு நான் மதிப்பளிக்கிறேன்.

இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு எமது அர்ப்பணிப்பை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்துகிறேன்.

**ரவீந்திர சமரவீர**
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

*“இது தொடர்பாக எடுக்கப்படும் முயற்சிகள், நாட்டின் அபிவிருத்திக்கு இடப்படும் பெறுமதி வாய்ந்த முதலீடாகும். இது கல்வியைப் பெறுவதில் சிறுவருக்கு உள்ள தடைகளை அகற்றுவதற்கு உதவுகிறது. உண்மையில், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதில் நன்கு செயற்படும் ஒரு கொள்கையானது, சிறுவரது உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாகும்.”*

# அணிந்துரை

தொழில் உலகிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சிறந்த செயற்பாடுகள், சிறுவருக்கான சிறந்ததொரு சூழலை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்கிறது. 'சிறுவர் தொழிலைப் பூச்சிய மட்டத்தில் சகித்துக்கொள்ளுதல்' என்னும் கலந்துரையாடலானது, பல்வேறு சமூகப் பங்காளர்களூடாக அடையப்பெற்ற பயனுள்ள பெறுபேறாக, தற்போது எல்லோரதும் கவனத்தைப் பெறுகிறது. இது தொடர்பாக எடுக்கப்படும் முயற்சிகள், நாட்டின் அபிவிருத்திக்கு இடப்படும் பெறுமதி வாய்ந்த முதலீடாகும். இது கல்வியைப் பெறுவதில் சிறுவருக்கு உள்ள தடைகளை அகற்றுவதற்கு உதவுகிறது. உண்மையில், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதில் நன்கு செயற்படும் ஒரு கொள்கையானது, சிறுவரது உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாகும். ஆகவே, தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு, சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்காக செயற்றிறன் மிக்கதும் தடுப்பு நடவடிக்கைகளுடன் கூடியதுமான, 'இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கை' யொன்றை உருவாக்கியுள்ளது.

இந்தத் தேசியக் கொள்கை பொறுப்புமிக்க அரசாங்க, தொழில்கொள்வோரதும் தொழிலாளரதும் அமைப்புகள் ஆகிய முத்தரப்பு ஆலோசனைச் செயன்முறையூடாகவும் சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு ஊடாகவும் உருவாக்கப்பட்டது. இந்தக் கொள்கையின் வெற்றிக்கு, எல்லாப் பங்களிப்பாளர்களிதும் பலமான ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். இக்கொள்கையினால் ஏற்படத்தக்க தாக்கங்களை அடைவதற்காக, சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கத்தவர்களைக் கலந்தாலோசிப்பதன் மூலம் ஒரு திறன்மிக்க அமுலாக்கும் பொறிமுறையானது தாபிக்கப்படும்.

இந்தக் கொள்கை உருவாக்கத்தில் தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன, மற்றும் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர ஆகியோரது தலைமைத்துவத்தையும் வழிகாட்டல்களையும் நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கத்தவர்களது பங்களிப்புகளையும் நான் நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு, தொழில்நுட்பரீதியான மற்றும் நிதியளிப்பு ரீதியான உதவிகளை நல்கிய சர்வதேச தொழில் தாபனத்திற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தொழில் திணைக்களத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

இந்த முயற்சிகளில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஈடுபட்ட அமைச்சினதும் தொழில் திணைக்களத்தினதும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மேலும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

**எஸ். ஏ. நிமல் சரணதிஸ்ஸ**
செயலாளர்
தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நிறைவேற்றுச் சுருக்கம் | 1 |
| **1. கொள்கைக்கான பின்புலம்** | **5** |
| **2. சிறுவர் தொழில் பற்றிய நிலவரம்** | **6** |
| **3. சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பு** | |
| 3.1 சட்டக் கட்டமைப்பு | 7 |
| 3.2 கொள்கைக்கான சூழல் | 9 |
| **4. கொள்கையின் இலக்குகள்** | **10** |
| **5. கொள்கையின் எல்லை** | **10** |
| **6. கொள்கையினால் பயன்பெறுவோர்** | **11** |
| **7. அமுல்படுத்துதல்** | **11** |
| 7.1 நிறுவனக் கட்டமைப்புகளும் பொறிமுறையும் | 11 |
| 7.2 மாகாண மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு | 12 |
| 7.3 தொழில்கொள்வோரதும் தொழிலாளரதும் நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு | 13 |
| 7.4 தனியார்துறையுடனான ஒத்துழைப்பு | 13 |
| **8. கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய உபாயங்கள்** | **14** |
| 8.1 பரந்த கொள்கைகளுடனும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளுடனும் ஒன்றிணைத்தல் | 14 |
| 8.2 தொழிலிலமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதை அதிகரிப்பதற்கான முயற்சி | 14 |
| 8.3 அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகளை வினைத்திறனாக அமுல்படுத்துதலை ஊக்குவித்தல் | 14 |
| 8.4 தொழிலிலமர்த்துவதற்கான நிபந்தனைகளைக் கட்டாயப்படுத்துதல் | 15 |
| 8.4.1 இளையோருக்குப் பயிற்சியளித்தல் | 15 |
| 8.4.2 நிறுவனங்களுக்குள்ளும் நிறுவனங்களுக்கிடையேயும் ஒத்துழைப்பிற்கான பொறிமுறை | 15 |
| 8.5 சட்ட நடவடிக்கைகளைப் பலப்படுத்துதல் | 15 |
| 8.5.1 பயிற்சி | 15 |
| 8.5.2 வயதைச் சரிபார்த்தல் | 15 |
| 8.5.3 தொழிற் பரிசோதனைகளில் ஒன்றிணைந்த அணுகுமுறை | 15 |
| 8.5.4 வினைத்திறன் மிக்க சட்ட நடவடிக்கையும் தண்டனையும் | 15 |
| 8.6 முறைப்பாடு செய்யும் செயன்முறையைப் பேணுதல் | 16 |
| **9. தொடர்பாடல்: செவிமடுத்தலும் பின்னூட்டலும்** | **16** |
| **10. மூலவளங்கள்** | **16** |
| **11. மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்** | **17** |
| **12. அபாயமும் சவால்களும்** | **17** |
| **13. கொள்கை வகுத்தலிலுள்ள முட்டுக்கட்டைகள்** | **18** |
| **14. கால அளவு** | **18** |
| **இணைப்பு** | |

# நிறைவேற்றுச் சுருக்கம்

பிள்ளைகள் மற்றும் இளையோரைப் பொறுத்தவரையில் பல்வேறு துறைகளுடனான இலங்கையின் அர்ப்பணிப்புகள், இசைவானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஒரு கொள்கைக்கான தேவையைக் கொண்டிருந்தது. இக் கொள்கையானது சிறுவர் தொழிலைத் தடுத்து அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட இவ்வாறான அர்ப்பணிப்புகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தக்கூடிய கட்டமைப்பை வழங்கும்.

பிள்ளைகள் தொடர்பாக, சிறுவர் தொழிலின் மிக மோசமான வடிவங்கள் குறித்த உபாய மார்க்கத் திட்டம் - 2016 (இதன் குறித்த வெளிப்பாடானது சிறுவர் தொழிலை முற்றாகச் சகித்துக் கொள்ளாத நிலைமை), சிறுவர் குறித்த தேசிய செயற்றிட்டம் (2010 - 2014), சிறுவர் தொழிலின் மிக மோசமான வடிவங்களை இல்லாதொழித்தல் பற்றிய தேசிய (வரைபு) செயற்றிட்டம் (2004), தொழிலில் ஈடுபடுத்துவதற்காக சிறுவரைக் கடத்துதலைத் தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டம் (2001), மற்றும் இவ்வாறான ஏனைய துறைசார் திட்டங்கள் உள்ளிட்ட ஒன்றிணைந்த பல்வேறு செயற்படுத்தும் திட்டங்களை இலங்கை கொண்டுள்ளது. சிறுவர் தொழிலின் மிக மோசமான வடிவங்களை இல்லாதொழித்தல் பற்றிய தேசிய (வரைபு) செயற்றிட்டத்தின் (2004) சில மூலகங்கள், சிறுவர் குறித்த தேசிய செயற்றிட்டத்திலும் (2004 - 2008 மற்றும் 2010 - 2014) இடம்பெற்றன.

சிறுவர் தொழில் மீதான ஒரு தேசியக் கொள்கையானது, இசைவானதும் ஒன்றிணைந்து செயற்படுத்தக் கூடியதும் பொறுப்புணர்வு மிக்கதும் தூரநோக்குள்ளதுமான ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. இதன் மூலம் இக்கொள்கையானது, அரச மற்றும் தனியார் துறைகளினால் பொறுப்புணர்வுடன் கூடிய, குறிப்பாக முறைசாராத துறைகளிலான செயற்பாடுகளுக்கான அடித்தளத்தை வழங்குகிறது. சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட ஒரு கொள்கையானது, சிறுவர் தொழிலைத் தடுப்பதற்கும் இல்லாதொழிப்பதற்குமான நிகழ்ச்சிகளுக்குரிய வளப் பகிர்வுக்கான சிந்தனையை உருவாக்குவதுடன், முக்கிய பொறுப்புகள் எங்குள்ளன, நடவடிக்கைகளுக்கான அளவுகோல்கள், முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகள், பொறுப்புக்கூறுதல் போன்றவற்றையும் தருகிறது.

இலங்கை, சர்வதேச தொழில் தாபனத்தின் 1973 இன் (138 ஆம் இலக்க) தொழிலில் அமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயது தொடர்பான சமவாயம், 1999 இன் (182 ஆம் இலக்க) மிக மோசமான சிறுவர் தொழில் பற்றிய சமவாயம் ஆகியவற்றை அங்கீகரித்துள்ளது. தொழில்கொள்வோரதும் தொழிலாளர்களதும் அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட, அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகளை 2010 ஆம் ஆண்டில் பாராளுமன்றமானது அங்கீகரித்துள்ளது. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களைத் தொழிலிலமர்த்துதல் தொடர்பான சட்டத்தின் கீழ் அபாயகரமான 51 சிறுவர் தொழில்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. புதிய கல்விக் கொள்கையில் கட்டாயக் கல்விக்கான வயது 16 ஆக அதிகரிக்கப்பட்டதாலும், சில குறித்த துறைகளிலும் தொழிலில் அமர்த்துதலுக்கான ஆகக்குறைந்த வயது அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றமானது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தெற்கு ஆசியாவில் உள்ள அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் காணப்படும் சிறுவர் தொழில் பற்றிய பிரச்சினை அவ்வளவு பாரதூரமானதாகக் காணப்படா விட்டாலும், நாட்டின் விரைவானதும் ஆர்வம் மிக்கதுமான அபிவிருத்திச் யெற்பாடுகளூடாக அடையாளங் காணப்படத்தக்க மோசமான சிறுவர் தொழிலானது முடிவுறுத்தப்பட வேண்டிய அவசரத் தேவை அதிகரித்துள்ளது. அதேவேளை, சிறுவர் தொழிலில் ஈடுபடுவதில் தாக்கஞ் செலுத்தக்கூடிய  விடயங்களான கல்வியைச் சீராக வழங்குதல் மற்றும் வறுமை ஆகியவற்றுக்கு கல்விக் கொள்கையானது கவனஞ் செலுத்துகிறது.

தரமான கல்வி, சுகாதாரம் ஆகிய முக்கிய பொதுச் சேவைகளில் நிலைத்த தன்மை, பொருத்தமான நிலைமை, தரம் ஆகியவற்றை அடைவதில் கவனஞ் செலுத்துவதை அரசாங்கம் அடையாளங் கண்டுள்ளது. அதேவேளை, பெண் தொழிலாளர்களது பங்குபற்றலை அதிகரித்தல் இளைஞர்களது தொழில் வாய்ப்பு (குறிப்பாக பெண்களுக்கு) ஆகியன சவாலுக்குட்பட்டவையாக உள்ளன. சிறிய பிள்ளைகளை விட்டுவிட்டு தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் வாய்ப்பை நாடிச் செல்வதானது, குடும்பங்களில் ஒரு அதிகரித்த சமூகத் தாக்கத்தை ஏற்படுத்துவது அடையாளங் காணப்பட்டுள்ளது. இவ்வாறான பிள்ளைகள் பாடசாலை இடைவிலகலுக்கு உட்படுவது மற்றும் சிறுவர் தொழிலில் ஈடுபடுவது ஆகியவற்றுக்கான சாத்தியங்கள் உள்ளன. இதிலிருந்து எந்தவொரு தனி நிறுவனமும் தனியாக சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது முடியாததொன்றாகும் என்பது தெளிவாகின்றது.

சிறுவர் தொழில் பற்றிய **கொள்கையின் இலக்கானது,** சிறுவர் தொழிலை முடிவுறுத்துவதற்குரிய பங்களிப்பை

வழங்கி அதனை நிலையானதாகப் பேணுதலாகும். இதில் மோசமான சிறுவர் தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், ஒன்றிணைந்த நடவடிக்கைகள், அமுல்படுத்துவதில் பகிர்ந்தளிக்கப்பட்ட (ஆனால் மட்டுப்படுத்தப்படாத) பொறுப்புகள், முக்கிய அபிவிருத்திக் கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் சிறுவர் தொழிலையும் உள்ளீர்த்தல், தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள், முக்கியமாக இலங்கையின் இளைஞர்களுக்கான 'சீரிய வேலை' (Decent Work) பற்றிய அணுகுமுறையில் ஒரு நிலையான வாழ்க்கை வட்டத்தை ஊக்குவித்தல் ஆகிய விடயங்களினூடாக இது பேணப்படும். எந்தவொரு தனி நிறுவனமும் தனியாக சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது முடியாததொன்றாகும்.

கொள்கையின் **அடிப்படையான பரப்பெல்லையானது,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஆணையுடன் தொடர்பு பட்டுள்ளதோடு, இக்கொள்கையை அமுல்படுத்துவதே பிரதான உபாயமாக இருக்கும் என்பதுடன் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் அவ்வுபாயத்தை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தலுமாகும். பங்குதாரர்களின் அவசியமான பங்களிப்பையும் பொதுப் பங்களிப்பையும் உறுதிப்படுத்துவதோடு, இந்த உபாயமானது உரிய பொது மற்றும் தனியார் துறைகளின் நிறுவனங்களில் சிறுவர் தொழில் தொடர்பான விடயங்களை முக்கிய கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் வரவுசெலவுத் திட்டங்களிலும் உள்ளீர்க்கச் செய்தலாகும்.

இந்தக் கொள்கையின் **நேரடி நன்மையைப் பெறுவோர்,** அளவீடொன்றின் மூலம் சிறுவர் தொழிலுடன் சமபந்தப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள 18 வயதுக்குக் குறைந்த, ஏறக்குறைய 100,000 சிறுவர்களாவர். இவர்களில் அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ளோரும், ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டுள்ளோரும், கட்டாயமாகத் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளோரும், விபச்சாரம் அல்லது பாலுணர்வைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவோரும், வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவோரும், மது போதைப்பொருள் மற்றும் வேறு சட்ட விரோத பொருட்களுடன் சம்பந்தப்பட்டோரும் உள்ளடங்குவர்.

இந்தக் கொள்கையின் **மறைமுக நன்மையைப் பெறுவோரும்** இளையோராவர். இவர்களுடன், கல்வியறிவு பெற்ற, திறன் மிக்க, போட்டியிடத்தக்க வேலையாளரைக் கொண்டிருக்கக்கூடிய தொழிற்துறையினரும், 'சிறுவர் தொழிலற்ற' நிலைத்திருக்கக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும் அரச அமைப்பினரும் இந்தக் கொள்கையின் அமுலாக்கத்தினால் உரிய இலக்குகள் அடையப்பெற்ற பின்னர், நன்மை பெறுவோராக இருப்பர்.

**அமுல்படுத்துதல்**

நிறுவனக் கட்டமைப்பு, பொறிமுறை மற்றும் ஒருங்கிணைப்பு: சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கையை அமுல்படுத்தி, கண்காணித்து, அறிக்கையிடும் ஆரம்பப் பொறுப்பு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சிற்கும் தொழில் திணைக்களத்திற்கும் உரியதாகும்.

இக்கொள்கையை வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதற்கு, பரந்த வழிவகைகளில் பல்வேறு பங்குதாரர்களாலும் அது பரப்பப்பட வேண்டும் என்பதுடன், உள்ளக நிலைமைகளில் வினைத்திறனுடன் அமுல்படுத்தப்படவும் வேண்டும். கிடை மட்டத்திலும் நிலைக்குத்து மட்டத்திலும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பு தேவைப்படும். அதாவது மத்திய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம அலுவலர் மட்டங்களில் இது உறுதிப்படுத்தப்படும்.

மத்திய நிறுவனமானது கொள்கை வகுத்தல் மற்றைய கொள்கைகளுள் உள்ளீர்த்தல், மற்றைய கொள்கைகளுடனான இணக்கம் ஆகியவற்றில் பிரதான வகிபாகத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை, மாவட்ட, பிரதேச, கிராம அலுவலர் மட்டங்களில் இதனை அமுல்படுத்தலும் வலுப்படுத்தலும் இடம்பெறும். தொழில் அமைச்சு மாகாண மற்று மாவட்ட அதிகாரிகளுடனான ஒருங்கிணைப்பு தொடர்பான பொறிமுறையை வலுப்படுத்தும்.

அமைச்சில் ஒரு தேசிய ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்படுவதுடன், அது இக்கொள்கையை அமுல்படுத்துவதில் ஒரு செயலகம் போன்று தொழிற்படும். அது மாகாண மற்றும் மாவட்ட கட்டமைப்புகளுடனும் ஏனைய இணைப்பு நிறுவனங்களுடனும் நெருங்கித் தொழிற்படுவதுடன், சிறுவர் தொழிலுடன் தொடர்புடைய எல்லா நிலவரங்களையும் 25 மாவட்டங்களிலும் கண்காணிப்பதற்குப் பொறுப்பாக இருப்பதுடன், நிலவரங்களை மதிப்பீடு செய்யும்.

மாகாண மட்டத்தில், மாகாணச் செயலகமானது தமது மாகாணரீதியான திட்டங்களில் சிறுவர் தொழில் பற்றிய விடயங்களையும் உள்ளடக்கி சிறுவர் தொழிலுக்கு எதிரான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும்.

மாவட்ட மட்டத்தில், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவானது சிறுவர் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது. இதில் சிறுவர் தொழிலுக்கு எதிரான நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து ஆதரவளிப்பதற்கான இயலுமையை அது கொண்டுள்ளது. மாவட்டச் செயலாளரால் தலைமைதாங்கப்படுகின்ற இது, மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களில் சிறுவர் தொழில் பற்றிய விடயங்களையும் உள்ளீர்ப்பதுடன், போதுமான அளவு நிதி ஒதுக்கீடுகளையும் வழங்குவதனூடாக மாவட்ட மட்ட இலக்குகளை அடைந்து சிறுவர் தொழிலை ஒழித்தலை உறுதிப்படுத்தும்.

ஒவ்வொரு மாவட்டமும் இவ்வாறு சிறுவர் தொழிலை ஒழிப்பதற்கான இலக்குகளை அடையும்போது, நிலவரத்தையும் முறைமையையும் மதிப்பீடுசெய்யும் அலகாக இது தொழிற்படுவதுடன், அதன் விளைவாக மாவட்டம் சிறுவர் தொழிலிருந்து விடுபட்டுள்ளதா என்பதை இது தீர்மானிக்கும்.

மாகாண மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் சிறுவர் தொழிலைக் கண்காணிப்பதற்கான குவி மையங்கள் (Focal Points) இருக்கும். இதனை மாகாண நிருவாகமும் மாவட்ட நிருவாகமுமே அமைத்தல் வேண்டும். இக் குவி மையங்கள் சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுடன் சேர்ந்து இயங்குவதோடு, நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தி, மாவட்ட மற்றும் மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் சிறுவர் தொழிலை ஒழித்தலையும் ஒன்றிணைக்கும்.

ஒவ்வொரு மாகாணமும், மாவட்டமும் தொழில் அமைச்சுடன் கலந்தாலோசிப்பதனூடாக இந்தத் தேசியக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான மிகச்சிறந்த செலவு குறைந்த சாத்தியக்கூறுகளையும், அதிகூடிய ஆதரவினையும் வழங்குதல் வேண்டும்.

*தொழில்கொள்வோரதும் தொழிலாளர்களினதும் நிறுவனங்களுடன் சேர்ந்து இயங்குதல்:* தொழில்கொள்வோரதும் தொழிலாளர்களினதும் நிறுவனங்களுக்கு இவ்விடயத்தில் மிகுந்த பொறுப்புகள் இருப்பதுடன், தேசிய மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையிலான தமது வலையமைப்பைப் பயன்படுத்தி, சிறுவர்களை வேலைக்கமர்த்துவதைத் தடுத்து, இளையோரை சட்டபூர்வமாக வேலைக்கமர்த்தும் வயதைக் கண்காணிப்பதனூடாக, அவை மிக முக்கியமான பங்கினையும் வழங்க முடியும்.

இந்நிறுவனங்கள் தமது கொள்கைகள், ஆணைகள், கடப்பாடுகள், செயற்பாடுகள் முதலியவற்றில் சிறுவர் தொழிலை ஒழித்தலை ஒன்றிணைத்தலானது மிகவும் அத்தியாவசியமானதாக் கருதப்படலாம். தேசிய ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் தொழில் அமைச்சு, தொழில்கொள்வோரதும் தொழிலாளர்களினதும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பயிற்சியளித்தல் உள்ளிட்ட இலக்குகளை அடைவதற்கான விசேட நடவடிக்கைகளை அடையாளங்காண்பதுடன், அவற்றை நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவர்.

*தனியார்துறையுடன் சேர்ந்து இயங்குதல்:* தனியார்துறையினருக்குத் தமது கொள்கைகள், ஒப்பந்தங்கள், செயற்பாடுகள் போன்றவற்றில் தேசியச் சட்டங்களுக்கும் நடத்தை விதிமுறைகளுக்கும் அமைந்து நடக்க வேண்டிய பொறுப்பு உள்ளதுடன், அறிவு தகைமை ஆகியவற்றைக் கொண்ட தொழிற்படையினரை உருவாக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளனர். அவர்கள் இலங்கையின் போட்டியிடும் தன்மையை வளர்ப்பதற்காக முறையான மற்றும் முறைசாரா விநியோகச் சங்கிலித்தொடர்களில் வயது குறைந்தோரை ஈடுபடுத்துதலைத் தவிர்க்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டுள்ளனர்.

சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிலுள்ள தொழில்கொள்வோரதும் தொழிலாளர்களதும் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை மேற்கொண்டு, தொழில் அமைச்சு, பயிற்சியளித்தல் உள்ளிட்ட, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் வகைகளையும் இலக்குகளையும் கண்டறிந்து, உரிய வசதிகளை அளிக்கும்.

**மூலவளங்கள்:** சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு மற்றும் தொழில் அமைச்சு ஆகியன தற்போது அமுலிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் கீழும், சம்பந்தப்பட்ட மற்றைய நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடுகளின் கீழும், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்காகவும் சம்பந்தப்பட்ட சிறுவர் மற்றும் அவர்களது குடும்பங்களை நீண்ட காலத்திற்குப் புனர்வாழ்வளிப்பதற்காகவும் மேலதிக நிதிஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதன் கீழும் நிதியளித்தல்கள் குறித்து பரிந்துரைகளை மேற்கொள்வர். இந்த நிதி ஒதுக்கீடுகள் தொழில், விவசாயம், பெருந்தோட்டத்துறை, கல்வி, சுற்றுலாத்துறை, மீன்பிடித்துறை போன்ற அமைச்சுக்களதும், வேறு உள்ளடக்கப்பட வேண்டிய அமைச்சுக்கள் என தேசிய ஒருங்கிணைப்புக்குழு தீர்மானிக்கும் அமைச்சுக்களதும் நிதிஒதுக்கீடுகளின் கீழ் ஒழுங்கு செய்யப்படும்.

### கொள்கையை அமுல்படுத்துவதற்கான முக்கிய உபாயங்கள்

*ஏனைய பரந்த கொள்கைகளிலும் செயற்பாடுகளிலும் இக்கொள்கையை உள்ளீர்த்தல்*

இக்கொள்கையால் எதிர்பார்க்கப்படும் தாக்கங்களை அடைவதற்கான முக்கியமானதும் தீவிரமானதுமான உபாயம், சம்பந்தப்பட்ட ஏனைய விடயங்களுக்குள் உள்ளீர்த்தலாகும். இதனூடாக, சிறுவர்களதும் இளையோரதும் தேவைகளும் அபிலாஷைகளும் தேசிய அபிவிருத்தித் திட்டமிடலிலும் அமுலாக்கத்திலும் அதனது உரிய நிதிஒதுக்கீடுகளிலும் உள்ளீர்க்கப்பட்டு, சிறுவர் தொழில் என்ற எண்ணக்கருவிற்கும் அதன் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கும் ஒன்றிணைந்ததும் முழுமையானதுமான பதில்கள் கிடைக்கும்.
இவ்வகையில் இது குறித்த முக்கியத்துவங்கள் பின்வருமாறு: 2012 இன் தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட வயதுவந்தோருக்கான ‘சீரிய வேலை’ மற்றும் 2006 ஆகஸ்ட் மாத, இளைஞர் வேலைவாய்ப்புக்கான தேசிய செயற்றிட்டம் ‘சமுர்த்தி’ போன்ற சமூக நலன்புரி விடயங்களுக்கான முன்னேற்றங்கள்

கல்வி மற்றும் தொழிற்கல்வித் துறைகளுக்கான போதியதும் பொருத்தமானதுமான வசதிகள் சிறுவர் மற்றும் இளையோருக்கான குறிப்பாகத் தொழிலிலமர்த்தப்பட்டுள்ள இளையோருக்கான போதியதும் பொருத்தமானதுமான வசதிகளும் அவர்களது முன்னேற்றத்தை ஊக்குவித்தலும்.

இக்கொள்கையை அமுல்படுத்துவதற்கான முக்கிய உபாயங்கள் பின்வரும் விடயங்களுடன் சேர்ந்துள்ளது -

- பாடசாலைக் கல்வியை முடிவுறுத்தும் வயது மற்றும் தொழிலில் அமர்வதற்கான ஆகக்குறைந்த வயது ஆகியவற்றுக்கிடையிலான ஒருசீர்த்தன்மையை அடைதல்.
- அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துதலைப் பலப்படுத்துதலும், அவை பற்றிய அறிவூட்டலையும் சட்டநடவடிக்கையை முறையையும் பலப்படுத்துதலும்.
- தொழிலிலமர்த்துதலுக்கான நிபந்தனைகளை அமுல்படுத்துதலும், நடைமுறை, கொள்கைரீதியாக முடிவெடுத்தல், நிதி வழங்குதல் ஆகியவற்றினூடாக தொழிற் பரிசோதனைகளை முறைசாரா வேலைத்தலங்களையும் உள்ளடக்கத்தக்க வகையில் விஸ்தரித்தலும்.
- சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு உதவும் வகையில் இளையோருக்குப் பயிற்சிகள் வழங்குதல்.
- 1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டத்தின் ஏற்பாடுகளிலுள்ள சம்பளங்கள் மற்றும் நலன்களை அமுல்படுத்துவதை ஊக்குவித்தல்.
- நிறுவனங்களின் உள்ளக மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்புப் பொறிமுறைகளை மேம்படுத்துதல்.
- 1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டம், அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகள், மற்றும் ஏனைய பொருத்தமான சட்டங்கள் ஆகியவற்றின் அமுலாக்கத்தை பயிற்சி வழங்குதல், வயதை உறுதிப்படுத்துதல், ஒன்றிணைந்த தொழிற் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், வழக்குத் தொடர்தலையும் தண்டனை வழங்குதலையும் பயனுறுதிமிக்கதாக்குதல், முறைப்பாடு செய்யும் முறைமையைப் பேணுதல் ஆகியன உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளூடாகப் பலப்படுத்துதல்.
- தொடர்பாடல் வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது, பெண் பிள்ளைகள், மிகவும் வயதில் இளைய பிள்ளைகள், ஆட்கடத்தல் காரணமாக மற்றும் தமது சொந்தக் குடும்பத்தினரை விட்டுப் பிரிந்து வாழும் இடம் பெயர்ந்த சிறுவர்கள், பாதுகாப்பற்ற சிறுவர்கள் ஆகியோரது நிலவரங்கள் தொடர்பாகவும் விசேட கவனஞ் செலுத்துகிறது.

**தொடர்பாடல் - பின்னூட்டல்களைப் பெறுதல்:** சிறுவர் தொழில் தொடர்பாக, பயனுறுதிமிக்கதோர் தொடர்பாடல் உபாயமொன்று உருவாக்கப்பட்டு, அமுல்படுத்தப்படும். இக்கொள்கையும் அமுலாக்கமும் பொருத்தமாகவும் பயனுறுதியுடனும் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக பின்னூட்டல்களைப் பெறுவதில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**மீளாய்வு மற்றும் மதிப்பீடு:** நடவடிக்கைகளையும் பெறுபேறுகளையும் மீளாய்வு செய்வதற்காக, வருடந்தோறும் கொள்கை அமுலாக்கல் பற்றிய ஓர் உள்ளக மதிப்பாய்வை தொழில் அமைச்சு நடாத்தும். இதற்காக மாகாணங்களிலிருந்தும் மாவட்டங்களிலிருந்தும் மாகாணச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் ஆகியவற்றின் தொடர்பாடல் முறைமையூடாக பின்னூட்டிகள் பெறப்படும். இவற்றிலிருந்தான கொள்கையைத் திருத்த வேண்டி அமையும் கண்டுபிடிப்புகளும் சிபார்சுகளும் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

சிறுவர் தொழில் நிலவரம் தொடர்பாக ‘சிறுவர் செயற்பாட்டு அளவீடு’ மற்றும் அதனையொத்த அளவீடுகளின் பெறுபேறுகள் வழங்கும் மதிப்பீடுகள், தகவல்கள் ஆகியன இந்த மீளாய்வுகளுக்குப் பயனளிக்கும்.

**அபாயங்களும் சவால்களும்:** இக்கொள்கையின் வெற்றியானது, அபாயங்களையும் சவால்களையும் அறிந்து அவற்றைச் சமாளிப்பதிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக சில நிறுவனங்களும் குழுக்களும் கொள்கையை அமுலாக்கும் ஆரம்பக் கட்டங்களில் அபாயங்களையும் சவால்களையும் எதிர்கொள்ளலாம். திணைக்களங்களும் முகவர்களும், தொழில்கொள்வோர், குடும்பங்கள், பாடசாலைகள், ஆசிரியர்கள், நிருவாகங்கள், வேலைத்தலங்கள், சமூகங்கள், தொழிற்பயிற்சி மற்றும் திறன்களை வழங்குவோர், கொள்கை வகுப்போர், சேவைகளை வழங்குபவர்கள் போன்ற இன்னோரன்ன முகவர்கள் இவர்களுள் அடங்கினாலும், இவர்கள் அபாயங்களைக் குறைவாகவே எதிர்கொள்வர்.

**காலஅளவு:** சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது, தனது இலக்குகளை முழுமையாக அடையும் வரை தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படும் ஒன்றாக இருக்கும். தேசிய ஒருங்கிணைப்புக் குழு கருதினால் மற்றும் அரசாங்கம் அங்கீகரித்தால், அது திருத்தப்படலாம், மாற்றயமைக்கப்படலாம், நாளதுவரைப்படுத்தப்படலாம்.

# 01

## கொள்கைக்கான பின்புலம்

தெற்கு ஆசியப் பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகளில் இருப்பதைப்போன்று இலங்கையில் சிறுவர் தொழில் பிரச்சினையானது அவ்வளவு விரிவானதாக இல்லை. ஆயினும், கொள்கை வகுப்பதனூடாகவும், எல்லா பங்குதாரர்களாலும் கூட்டாக எடுக்கப்படும் நிலைத்த நடவடிக்கைகளாலும் சிறுவர் தொழிலுக்கு, குறிப்பாக அதன் மோசமான வடிவங்களுக்கு (பெட்டி 1) தீர்வு எட்டப்பட்டாலேயே, தற்போதைய சமூக, அரசியல் காலகட்டம், மற்றும் நாட்டின் தீவிரமான அபிவிருத்தி இலக்குகள் ஆகியன அடையப்பட முடியும்.

> பெட்டி 1: சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம் இல: 182 இற்கமைவாக சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்கள்
>
> 1999 இன் (இல: 182) மோசமான சிறுவர் தொழில் பற்றிய சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம் இலங்கையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் உறுப்புரை 3 இல் மோசமான சிறுவர் தொழிலின் விதங்கள் தரப்பட்டுள்ளன:
>
> அ) பிள்ளைகளை விற்றல் அல்லது ஆட்கடத்தல் போன்ற (எல்லா வகையான) அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்தையொத்த நடைமுறைகள், கடனுக்கான அடிமைத்தனம், வற்புறுத்தி அல்லது கட்டாயமாக சிறுவரைத் தொழிலில் அமர்த்துதல் அல்லது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துதல் உள்ளிட்ட கட்டாயத் தொழில்.
>
> ஆ) விபச்சாரத்திற்காக, பாலியல்ரீதியான சலனப்படங்களை உருவாக்கும் நடவடிக்கையில் அல்லது அவ்வாறான படங்களில் நடிப்பதற்கு சிறுவரைப் பயன்படுத்துதல், விலைக்கு வாங்குதல்.
>
> இ) சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு, குறிப்பாக போதைப்பொருட்களைத் தயாரிப்பதில் அல்லது அவற்றைக் கடத்துவதில் ஈடுபடுத்துதல்.
>
> ஈ) சிறுவரது ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்தைப் பாதிக்கும் வகையிலான தன்மையுடைய அல்லது சூழ்நிலையைக் கொண்டுள்ள தொழிலில் ஈடுபடுத்துதல்.

1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 27(13), அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள், பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல் வளர்ச்சியை, உள வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும் ஓரங்கட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டும் எனக் கூறுகிறது.

1956 இன் 47 ஆம் இலக்க, பெண்கள். இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டமானது வேலை, வேலையின் நேரம், சிறுவர்களினதும் இளையோரதும் நிலைமைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதுடன், அதன் 2010 ஆம் ஆண்டின் அபாயகரமான வேலைகள் பற்றிய ஒழுங்குவிதிகள் ஊடாக குறித்த சில வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவதைத் தடைசெய்கிறது. தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம், சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டம், கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம், இந்தியக் குடிவரவுத் தொழிலாளர் கட்டளைச்சட்டம் ஆகிய மற்றைய சட்டங்களும் 14 வயதுக்குட்பட்ட சிறுவரை வேலைக்கமர்த்துதலைத் தடைசெய்கின்றன. மேலதிகமாக, வேறு சில சட்டங்களும் நாட்டின் சிறுவர் தொழில் சூழ்நிலை மீது நேரடியான அல்லது மறைமுகமான பொறுப்பைக் கொண்டுள்ளன.

> பெட்டி 2: 1956 இன் 47 ஆம் இலக்க சட்டத்திற்கமைவான சிறுவர் மற்றும் இளையோர் ஆகியோருக்கான வரைவிலக்கணம்
>
> 1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களைத் வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டம், 14 வயதுக்குட்பட்ட ஒருவர் ஒரு சிறுவர் எனவும், 14 வயதையடைந்து ஆனால், 18 வயதுக்குக் குறைவான வயதையுடைய ஒருவர் ஓர் இளையோராவார் எனவும் வரைவிலக்கணப்படுத்துகிறது.

சிறுவர் தொழில் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு சட்டங்கள் பங்களிப்புச் செய்கின்ற அதேவேளை, வழக்குத் தொடருதல், ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியங்களைச் சேகரித்தல், சாட்சிகளைப் பாதுகாத்தல், திறன்மிக்கதும் சிறுவரைப் பயமுறுத்தாத வகையிலுமான சிறுவர் நீதிமன்ற நடவடிக்கைகள் போன்ற விடயங்களில் சவால்கள் எதிர்நோக்கப்படுவதால் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதானது தடைகளை எதிர்நோக்குகின்றது.

2010 இல், அரசாங்கமும் சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவும்[1] தொழில் கொள்வோரது அமைப்புகளுடனும் தொழிற்சங்கங்களுடனும் முக்கிய பங்குதாரர்களுடனும் சேர்ந்து, சிறுவர் தொழிலின் சகல வடிவங்களையும் இல்லாதொழித்துத் தடுக்கும்[2] அதேவேளை, சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களை உடனடியாக இல்லாதொழிப்பதற்காகத் தமது அர்ப்பணிப்பைப் புதுப்பித்தனர். 2010 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகள்,

---

[1] சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது தொழில் அமைச்சின் செயலாளரால் அமைக்கப்பட்டதுடன், அரசாங்கத் திணைக்களங்களினதும், தொழில்கொள்வோர் மற்றும் தொழிற்சங்கங்களினதும், சிவில் சமூகத்தினரதும் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தது.

[2] இரத்தினபுரி மாவட்டம் போன்ற மாவட்டரீதியான மாதிரிகளைப் பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மாவட்ட திட்டங்களுள் சிறுவர் தொழிலையும் உள்ளீர்த்து சிறுவர் தொழிலற்ற பிரதேசங்களை உருவாக்க முயற்சி க்கப்பட்டது. சில தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் இது சாத்தியப்பட்டது.

வழிகாட்டி (Road map) உருவாக்கம், அடையாளங்காட்டும் ஒரு செயற்றிட்டம், இலக்குகளை அடைவதற்கு உதவியாக உள்ளீர்க்கும் உபாயத்தை அடையாளங்காணுதல் ஆகியவற்றின் பெறுபேறாக, கொள்கை நிலவரம் பலப்படுத்தப்பட்டு சீர்ப்படுத்தப்பட்டது. சிறுவர் தொழில் மீது தாக்கம் செலுத்தும் தெரிவுசெய்யப்பட்ட தேசிய மற்றும் பிராந்தியக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் ஆராயப்பட்டு, உள்ளீர்த்தல் தொடர்பான வழிகாட்டலுக்கான சிபார்சுகள் வழங்கப்பட்டன. மேலும், அமுல்படுத்துவதற்குத் தேவையான நிறுவனக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டது.

நாட்டிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான இலங்கையின் முயற்சிகள், சர்வதேச உடன்படிக்கைகளை அங்கீகரித்துக் கைச்சாத்திடல் உள்ளிட்ட உபாயங்கள் பற்றிய உலகரீதியான கருப்பொருள்களது பிரசாரங்கள் மற்றும் கலந்துரையாடல்கள், கற்றுக்கொண்ட பாடங்களும் சிறந்த நடைமுறைகளும்[3] ஆகியவற்றுக்குப் பங்களிப்புச் செய்கின்றன. 2010 இல், மோசமான சிறுவர் தொழில்களை இல்லாதொழிப்பதற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்து, இலங்கை உலக சமுதாயத்துடன் இணைந்து கொண்டது. மோசமான சிறுவர் தொழில்களுக்கு முன்னுரிமையளித்து, நாட்டிலிருந்து சிறுவர் தொழிலை முடிவுறுத்துவதற்கான முன்னேற்றத்தில் உலக அனுபவ அறிவிற்கு அதன் தேசிய முயற்சிகள் பங்களிப்புச் செய்தன. சிறுவர் தொழிலை இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கையும் அதன் அமுலாக்கமும் பங்களிப்புகள், திட்டமிடலில் செயற்படுத்தலில் ஒத்துழைப்பு, பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புகள் ஆகியவற்றினூடாக மீளச் சக்தியளிக்கப்படும்.

# 02

## சிறுவர் தொழில் பற்றிய நிலவரம்

சிறுவர் செயற்பாட்டு அளவீட்டின் அறிக்கை, சிறுவர்களது சட்டரீதியான மற்றும் தடைசெய்யப்பட்ட வேலைகள் பற்றிய மதிப்பீடுகளைத் தருகிறது. தற்போதைய அறிக்கையிலிருந்தான தகவல்கள், ஒரு காலகட்டத்திலிருந்து இன்னொன்றுக்கான போக்குகள் ஆகியன முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய புவியியல்ரீதியான பிரதேசங்களை அடையாளங் காண்பதற்கும், அவசரமாகத் தலையிட வேண்டிய பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கும் - உதாரணமாக, அபாயகரமான சிறுவர் தொழில் பற்றிய விடயங்கள், தொழிலிலமரக்கூடிய சட்டபூர்வமான வயதில் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இளையோரைப் பாதுகாப்பதற்கும் பயன்படும்.[4]

சிறுவர் செயற்பாட்டு அளவீடுகள் அபாயகரமான தொழில்களில் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர் பற்றிய தரவுகளைத் தரவல்லன. வேறு வகைகளிலும் சிறுவர் தொழில் காணப்படுவதுடன், எல்லா வடிவங்களிலுமுள்ள சிறுவர் தொழில் அடையாளங்காணப்பட வேண்டிய தேவை உள்ளது. அத் தகவல்கள் யாவும் திட்டமிடலுக்கும் அமுலாக்குதலுக்கும் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

சில பொருளாதாரத் துறைகள் சிறுவர் தொழிலை ஈர்க்கும் தன்மையைக் கொண்டுள்ளன. இலங்கையிலுள்ள இவ்வாறான துறைகளாவன மீன்பிடி, சுற்றுலா, தனியாரது சிறிய தோட்டங்கள், வீட்டு வேலைகள் ஆகும். மீன்பிடித்தல் அல்லது மீன்பிடித்துறை என்பது விவசாயத்தையும் உள்ளடக்குவதுடன், அபாயகரமான தொழில்களின் பட்டியலானது (2010) மீன்பிடித்தல்/மீன்பிடித் துறை தொடர்பாக, மோசமான தொழில்களில் சிறுவரை ஈடுபடுத்தும் அபாயத்தைத் தரக்கூடிய பல்வேறு தொழில்களை அடையாளங் காண்பதுடன், அதனால் அவை தடைசெய்யப்பட்டும் உள்ளன. மோசமான சிறுவர் தொழிலின் வடிவங்கள் என்பது சுற்றுலாத்துறையில் ஒரு பிரச்சனையாக இருப்பதுடன், குறிப்பாக இளம் சிறுவர்களிடையே பாலியல்ரீதியான சுரண்டலைக் (பொதுவாக ‘கடற்கரைச் சிறுவர்’ என்னும் தன்மை) குறிக்கிறது. சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதால், இதில் தலையிடுவதானது அவசரமானதாக உள்ளதுடன், இது மேலும் வளர்ச்சியடையாமல் தடுப்பதற்குரிய கொள்கைகளும் நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன. சிறுவர் தொழிலை இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கையானது, சிறுவர்களுக்காக ஒருங்கிணையக்கூடிய நிறுவனங்களுக்கும் பங்குதாரர்களுக்கும் இடையிலான தொடர்புகளை உறுதிப்படுத்தும்.

பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் சிறுவர் தொழிலைப் பூச்சிய மட்டத்தில் சகித்துக்கொள்வது என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் அதேவேளை, பல கம்பனிகள் தொழிலுக்கான ஆகக்குறைந்த வயதை 16 இலிருந்து 18 ஆக அதிகரித்துள்ளன. சிறுவர் தொழிலானது சிறிய தனியார் தோட்டங்களிலேயே காணப்படுகின்றது. இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கையானது இவ்வாறான சிறிய தனியார் தோட்டங்களில் சிறுவர் தொழிலுக்கான சூழலை உருவாக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வளங்கள், தகவல்கள் ஆகியவற்றை வழங்கி பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும். இங்கு உள்ள பிரச்சினைகளுள் குறிப்பிடத்தக்கவை உயர்ந்த வறுமைத் தன்மை, வயதுவந்த தோட்டத் தொழிலாளரிடையேயான குடிப்பழக்கம், வீட்டு வன்முறை என்பனவாகும். அத்துடன் பாடசாலையை விட்டு விலகக்கூடிய நிலைமைக்குப் பங்களிப்பன, நகர்ப்புறங்களுக்கு பிள்ளைகள் ஆட்கடத்தல் செய்யப்பட்டு வீட்டுவேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றமை அல்லது பெற்றோர் இருவரும்

---

[3] இலங்கை 2010 இல் சிறுவர் தொழில் தொடர்பான மூன்றாவது உலக (ஹேக் நகரத்தில்) மகாநாட்டிலும், 2013 இல் நான்காவது உலக மகாநாட்டிலும் (பிரேசில், 2013) பங்குகொண்டது.

[4] சிறுவர் செயற்பாட்டு அளவீடு, தொகைமதிப்புப் புள்ளிபரத் திணைக்களம், 2008-09, இதன் அறிக்கையிலிருந்து சிறுவர் தொழிலுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், குறிப்பாக அபாயகரமான சிறுவர் தொழிலில் (மோசமான சிறுவர் தொழிலின் ஒரு வடிவம்) கிட்டத்தட்ட 64,000 பேரும், சிறுவர் தொழிலில் ஈடுபட்டுள்ள கிட்டத்தட்ட 100,000, 5 - 17 வயதுகளுக்கிடைப்பட்ட சிறுவரும் இளையோரும் (அ-து, மொத்தம் 4.3 மில்லியனில் 2.5 சதவீதம்) மதிப்பிடப்பட்டுள்ளனர். (முக்கியமானது - சிறுவர் செயற்பாட்டு அளவீட்டின் கட்டமைப்பானது தொழிலிலுள்ள சிறுவர்களின் பொருள்கோடலின் எல்லையை மீறியுள்ளது. எனவே, மதிப்பிடப்பட்ட எண்ணிக்கைகள் சற்று ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருக்கலாம்).

[5] தனியார் சிறு தோட்டங்களில் குறிப்பாக, தேயிலை பயிரிடாத கறுவா, மரமுந்திரிகை, பனை தொடர்பான தோட்டங்களில் தொழில் மற்றும் சிறுவர் தொழில் பற்றிய தரவுகள் கிடைப்பதில்லை.

வேலைகளுக்குச் செல்லும்போது வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைப் பராமரித்தல் என்பனவாகும்[5]. சிறுவர் செயற் பாட்டு அளவீட்டு அறிக்கையானது பாடசாலைக்குச் செல்லாமைக்கான அடிப்படைக் காரணங்களாக கல்வியில் பலவீனமான செயற்றிறன், நிதி நெருக்கடிகள், இயலாமை, பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல் ஆகியன இதே வரிசையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. துறைரீதியாகப் பார்க்கும்போது, பெருந்தோட்டத்துறையிலேயே நிதிரீதியான காரணத்தால் பாடசாலையை விட்டு இடைவிலகும் பிள்ளைகளின் அதிகூடிய எண்ணிக்கை உள்ளதென்பதும், கிராமங்களிலேயே வேறு பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் பாடசாலையை விட்டு இடைவிலகும் பிள்ளைகளின் அதிகூடிய எண்ணிக்கை உள்ளதென்பதும் தெரிய வந்துள்ளது.[6] ஒட்டுமொத்தமாக பாடசாலை இடைவிலகல் பெருந்தோட்டத்துறைச் சிறுவரிடையிலேயே மிக அதிகமாகக் காணப்படுகிறது.[7] தனியார் தோட்டங்களிலுள்ள இந்த நிலைமைக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளை இல்லாமற் செய்வதற்கு சிறுவர் தொழில் தொடர்பான தேசியக் கொள்கையில் கூறப்பட்டுள்ளதைப் போன்ற இலக்குடன் கூடிய, ஒன்றிணைந்த கொள்கைகளும் தலையீடுகளும் தேவைப்படுகின்றன.

03

# சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பு

இலங்கையின் தேசிய அபிவிருத்தி நிலைமைகள் தொடர்பான அரச திறன்கள், சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள், சமூகக் கட்டமைப்பு ஆகியன, சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கும், சிறுவர் தொழிலிலிருந்து ஒதுங்கியிருப்பதற்கும், சிறுவர்களுக்காக அவர்களது பெற்றோர் குடும்பங்கள் சமூகப் பாதுகாப்பு முறைமைகளிலிருந்து நன்மை பெறுவதற்கும் உரிய ஒட்டுமொத்தமான சூழலொன்றை உருவாக்கியுள்ளன. இன்றைய உலகளாவிய பொருளாதாரத்தில், அது தரும் நன்மைகளில், தடைகளில், சவால்களில் சிறுவர்கள், மோசமான வடிவங்கள் உள்ளிட்ட சிறுவர் தொழிலுக்கும், வன்முறைக்கும் ஆளாகி பாதிக்கப்படத்தக்க நிலைமையை எதிர்நோக்குகின்றனர்.

## 3.1 சட்டக் கட்டமைப்பு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அதன் உறுப்புரை 12(1) இன் கீழ் அதன் மக்களது சமத்துவத்தையும் பாரபட்சமின்மையையும் உத்தரவாதம் செய்கிறது. உறுப்புரை 27(13) இன் கீழ் அரச கொள்கைகளின் வழிகாட்டுக் கோட்பாடு, அரசின் கடமைகள், பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல் வளர்ச்சியை, உள வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும் ஓரங்கட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டும் எனக் கூறுகிறது.

1956 இன் 47 ஆம் இலக்க, பெண்கள். இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டமானது வேலை, வேலையின் நேரம், சிறுவர்களினதும் இளையோரதும் நிலைமைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துகிறது. இந்தச் சட்டம் 14 வயதுக்குட்பட்ட ஒருவர் ஒரு சிறுவர் எனவும், 14 வயதையடைந்து ஆனால், 18 வயதுக்குக் குறைவான வயதையுடைய ஒருவர் ஓர் இளையோராவார் எனவும் வரைவிலக்கணப்படுத்துகிறது.[8] இந்தச் சட்டத்தின் கீழ் மார்ச் 2011 இன் 1695/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகள் தொழிலிலமர்த்துதலுக்கான ஆகக்குறைந்த வயதுக்கு மேற்பட்ட இளையோரைப் பாதுகாப்பதற்காக, அபாயகரமான சிறுவர் தொழில்களைப் பட்டியலிட்டுள்ளது. மேலும் இது, 2001 மார்ச் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தொழில் தாபனத்தின் 182 ஆம் இலக்க சமவாயத்தின் உறுப்புரை 3(d) இன் கீழ் அரசின் கடப்பாட்டைப் பூர்த்தி செய்துள்ளது. ஏனைய பல சட்டங்கள் நாட்டின் சிறுவர் தொழில் மீதான நேரான அல்லது மறைமுகமான தாக்கங்களைக் கொண்டுள்ளன.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, சிறுவர் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை, 1956 இன் 47 ஆம் இலக்க, பெண்கள். இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதனூடாக நேரடியாகக் கையாள்வதற்காக தனது ஆணையைப் பயன்படுத்துகிறது. இந்தச் சட்டம் அபாயகரமான சிறுவர் தொழிலைக் கையாள்வதுடன், “அதன் தன்மை காரணமாக அல்லது அது மேற்கொள்ளப்படும் நிலைமை காரணமாக, சிறுவரது ஆரோக்கியம், பாதுகாப்பு, அல்லது ஒழுக்கத்தைப் பாதிக்கும் வேலை”[9] எனக் கூறுகிறது.

1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் மற்றும் 1954 இன் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் ஆகியனவும் சிறுவர் தொழில் சம்பந்தமாகக் கவனஞ் செலுத்துகின்றன. இவற்றில் இரண்டாவது

[6] தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், சிறுவர் செயற்பாட்டு அளவீடு 2008/9 (இலங்கை) (பக்கங்கள்) 21 - 24
[7] சிறுவர் செயற்பாட்டு அளவீடு 2008/9 (பக்கம்) 22
[8] 26 ஜனவரி 2000 ஆம் திகதிய 1116/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி
[9] சர்வதேச தொழில் தாபனத்தின் மோசமான சிறுவர் தொழில்கள் பற்றிய சமவாயம், 1999 (இல: 182)

தொழிலமர்த்துதலுக்கான ஆகக்குறைந்த வயதை பெண்கள். இளையோர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் தொடர்பான சட்டத்திலுள்ளவாறு கூறுவதுடன், முதலாவது தொழிலிலமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதுக்கு மேற்பட்ட சிறுவர் தொழிலாளர்களது கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துகிறது.

முறைசாராத் துறைகளில் சிறுவர் தொழில் இடம்பெறுகிறது எனக் கொண்டால், 1941 இன் 24 ஆம் இலக்க சிறுவரைத் தத்தெடுத்தல் கட்டளைச்சட்டம், 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம், 1939 இன் 28 ஆம் இலக்க இளைய குற்றவாளிகள் (பயிற்சிப் பாடசாலை) கட்டளைச்சட்டம், 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம்[10] ஆகிய மற்றைய தேசிய சட்டங்கள், முறைசாராத் துறைகளிலுள்ள மோசமான சிறுவர் தொழில் வடிவங்களையும் சிறுவர் தொழிலையும் கட்டுப்படுத்தத் தக்கதாக போதுமான அளவு பரந்த எல்லையைக் கொண்டுள்ளன. இது, தண்டனைச் சட்டக்கோவை மோசமான சிறுவர் தொழிலை உள்ளடக்குவது போன்று[11] தொழில் திணைக்களத்தின் வேலைக்கு ஆதரவளிக்கின்றது.

“சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்கள்” மற்றும் ஏனைய வடிவங்களைப் பொறுத்த வரையில், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு தனது பொறுப்புகளை சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கும் தடுப்பதற்கும், மற்றைய அமைச்சுகளுடன் பகிர்ந்து கொள்கிறது. இந்த அமைச்சுகளுக்கு சிறுவர் தொழிலின் பல்வேறு வகைகளுக்கான குறித்த ஆணைகள் உள்ளதுடன், அந்த வகைகள் 1999 இன் (182 ஆம் இலக்க) சர்வதேச தொழில் தாபனத்தின் சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்கள் பற்றிய சமவாயத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

“பிள்ளைகளை விற்றல் அல்லது ஆட்கடத்தல் போன்ற (எல்லா வகையான) அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனத்தையொத்த நடைமுறைகள், கடனுக்கான அடிமைத்தனம், வற்புறுத்தி அல்லது கட்டாயமாக சிறுவரைத் தொழிலில் அமர்த்துதல் அல்லது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துதல் உள்ளிட்ட கட்டாயத் தொழில்”. இவை தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் காணப்படவில்லை. “விபச்சாரத்திற்காக, பாலியல்ரீதியான சலனப்படங்களை உருவாக்கும் நடவடிக்கையில் அல்லது அவ்வாறான படங்களில் நடிப்பதற்கு சிறுவரைப் பயன்படுத்துதல், விலைக்கு வாங்குதல் சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு, குறிப்பாக போதைப்பொருட்களைத் தயாரிப்பதில் அல்லது அவற்றைக் கடத்துவதில் ஈடுபடுத்துதல்” ஆகியன சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களாகும். இந்தப் பிரச்சினைகளில் இலங்கை புதிய அணுகுமுறைகளைக் கையாள வேண்டியிருக்கும்.

சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் நிலவரத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கத்தைச் செலுத்துகிறதா எனப் பார்க்க வேண்டிய மற்றைய சட்டங்கள் பின்வருமாறு: 1841 இன் 4 ஆம் இலக்க அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம்; 1889 இன் 19 ஆம் இலக்க ஜீவனாம்சக் கட்டளைச்சட்டம்; 1939 இன் 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளையோர் கட்டளைச்சட்டம்; 1954 இன் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் (தொழில் மற்றும் ஊதியம் ஒழுங்குபடுத்துதல்) சட்டம்; 1956 இன் 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளையோரது (தீங்கு விளைவிக்கும் பிரசுரங்கள்) சட்டம். இவற்றை விடவும், சுரங்கங்கள் மற்றும் கனிமப் பொருட்கள் சட்டம், வெடி பொருட்கள் சட்டம், தொழிற்சங்கக் கட்டளைச்சட்டம், விபசார நிலையங்கள் கட்டளைச்சட்டம், ஆபாசப் பிரசுரங்கள் கட்டளைச்சட்டம் ஆகியனவும் உள்ளன.

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 360A, 360B, மற்றும் 288A (திருத்தப்பட்டவாறு) ஆகியன விபச்சாரத்திற்காக 18 வயதுக்குட்பட்ட இளையோரைப் பயன்படுத்துதல், வழங்குதல் அல்லது கொண்டுவருதல் என்பன உட்பட விபச்சாரத்தோடு தொடர்புபட்ட பல்வேறு செயற்பாடுகளைத் தடைசெய்கின்றன. 1995 இன் 22 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறு, தண்டனைச் சட்டக்கோவையானது இவ்வாறு கூறுகின்றது. 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைக் கோவை மற்றும் அதன் திருத்தங்களான 1995 இன் 20 ஆம் இலக்கச் சட்டம், 1998 இன் 28 ஆம் மற்றும் 29 ஆம் இலக்கச் சட்டங்கள் ஆகியனவும் சிறுவர் பாதுகாப்பு குறித்தும் சிறுவர் தொழிலுக்கும் அதன் மோசமான வடிவங்களுக்கும் இட்டுச் செல்லும் சூழ்நிலைகள் குறித்தும் கவனஞ் செலுத்துகின்றன.

1998 இன் 1 ஆம் இலக்க கட்டாயக் கல்விச் சட்டம் (அத்தியாயம் 185) நாட்டின் கல்விக் கொள்கையை நன்கு சித்தரிப்பதுடன், இலங்கையின் குறைந்த சிறுவர் தொழில் வீதத்தை நிலைநிறுத்துவதற்குரிய உபாயமாகவும் உள்ளது. அது, 1945 இலிருந்து நடைமுறையிலிருக்கும் நாட்டின் இலவசக் கல்வி பற்றிய கொள்கையை ஓர் உரிமை என்ற வகையில் உறுதிப்படுத்துகிறது. இலங்கையின் எழுத்தறிவு வீதமானது 92 சதவீதமாகக் காணப்படுகிறது. 1963/30 ஆம் இலக்க 20-04-2016 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் கட்டாயக் கல்விக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 185), 2015 இன் 01 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் பிரிவு 37 இன் கீழ் இலங்கை அரசாங்கம் கட்டாயமாகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய ஆகக்கூடிய வயதை 14 இலிருந்து 16 இற்கு உயர்த்திப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் பிரகாரம், தொழிலிலமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயது 14 இலிருந்து 16 ஆக உயர்த்தப்பட வேண்டியுள்ளது. இதன் சமூக இலாபங்கள் நிலைநிறுத்தப்பட்டாலும், சிறுவர் தொழிலின் பல்வேறு மோசமான வடிவங்களைக் கையாள்வதற்குரிய அமைச்சுகளுக்கும் திணைக்களங்களுக்கும் இடையே தெளிவான ஒருங்கிணைப்புகளுடன் கூடிய நெருங்கிய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

---

[10] தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 33 இன் கீழ் அதிகாரசபையானது, பொலிஸ் தேடுதல் கட்டளை இன்றியும் கூட, அதிகாரசபைக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவருக்கு உள்ள எழுத்திலான அறிவுறுத்தலின் பேரில் ‘உள்நுழைந்து தேடுவதற்குரிய’ அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இந்த அதிகாரமானது சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது ‘ஏதேனும் சட்டவிரோத நோக்கத்துக்காக’ சிறுவரை வைத்திருத்தல் ஆகியவற்றை உள்ளடக்குவதற்குரிய போதுமான எல்லையைக் கொண்டுள்ளது.

[11] 1995 இன் தண்டனைச் சட்டக்கோவை (திருத்தப்பட்டது) சட்டத்தின் பிரிவுகள் 358 மற்றும் 360(ந).

## 3.2 கொள்கைக்கான சூழல்

சிறுவர்களது வாழ்க்கையிலும் சிறுவர் தொழில் பற்றிய நிலவரங்களிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தத்தக்க பல முக்கியமான கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளன. இவற்றில் விசேடமாக சிறுவர்களிலும் சிறுவர் தொழிலிலும் இலக்கு வைத்துள்ள (சிறுவர் பாதுகாப்பு, கல்வி, சிறுவர் தொழில் போன்ற) கொள்கைகள் உள்ளன. ஆயினும் அவை குறித்த கொருளாதார ரீதியான துறைகளில் (மீன்பிடி/மீன்பிடித்துறை, பெருந்தோட்டங்கள், சுற்றுலாத்துறை, கட்டிட நிர்மாணம் போன்றன பற்றிய கொள்கைகள்) இலக்கு வைத்துள்ளவை, சனத்தொகையின் குறித்த பகுதிகளில் (சமூக நலன்புரி, இளைஞர் அபிவிருத்தி போன்றன பற்றிய கொள்கைகள்) இலக்கு வைத்துள்ளவை, பொதுவாக முழுச் சனத்தொகையின் மீதும் (தேசிய அபிவிருததி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் போன்றன பற்றிய கொள்கைகள்) இலக்கு வைத்துள்ளவை ஆகியவையும் உள்ளன.

ஒரு குடும்பத்தின் சமூக-பொருளாதார சூழ்நிலையைத் தீர்மானிக்கின்ற நேரான மற்றும் மறையான உச்சக்கட்டத் தாக்கத்தினாலேயே, சிறுவர் தொழிலில் அக்குடும்பச் சிறுவர் ஈடுபடுகின்றனர்.

தொழில் அமைச்சின் நேரடியான பொறுப்புகளின் கீழ் வராத, ஆனால், ஒருங்கிணைந்த பொறுப்புகளின் சில முக்கியமான பகுதிகள் உள்ளன. ஆயினும், அவற்றுக்கு அவசியமான தேவைகளுக்கு அமைச்சு தனது ஆதரவை வழங்கும். இதற்காக, அமைச்சு சிறுவர் தொழில் சம்பந்தப்பட்ட உபாயங்களில் தனது அடிப்படையான நிலையைக் கொண்டிருப்பதுடன், நாட்டின் முக்கிய கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் கவனஞ் செலுத்தும். அதனால், மத்திய, மாகாண, மாவட்ட மட்டங்களில் ஒன்றுபட்ட பொறுப்புகளுக்கும் நிலைத்த தாக்கத்திற்கும் தேவையான ஒருங்கிணைப்புகளுக்கு வசதியளிக்கும். மத்திய, மாகாண, மாவட்ட மட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட எல்லா முகவர்களும் நிறுவனங்களும் தமது வகிபாகமாக, சிறுவர் தொழிலைக் கவனித்து, ஒருங்கிணைந்து, உரிய மற்றும் பொருத்தமான வகையில் தமது கொள்கைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் சிறுவர் தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்களை உள்ளீர்த்துக்கொள்ள வேண்டும்.

இணைப்பு I இலுள்ள அட்டவணை முக்கியமான தேசியச் சட்டங்களினதும் அவற்றை அமுல்படுத்துவதற்கான ஆணையைப் பெற்றுள்ள அமைச்சுகள் / திணைக்களங்கள் ஆகியவற்றின் கண்ணோட்டத்தைத் தருகிறது. மேலும் அது, தேசிய சட்டங்களிலுள்ள தொடர்புகளை, இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்கள் பற்றிய 182 ஆம் இலக்கச் சமவாயத்திலுள்ள, சிறுவர் தொழிலின் நான்கு மோசமான வடிவங்களுடன் இணைக்க முயல்கிறது.

ஜுன் 2010 இல், இலங்கை அரசாங்கம், சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் வழிகாட்டலுடனும், 2016 அளவில் சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களை முடிவுறுத்துவதற்காக 2010 உலக சிறுவர் தொழில் பற்றிய மகாநாட்டில் உறுதி அளிக்கப்பட்டதன் அடிப்படையிலும் ஒரு கலந்தாலோசனைச் செயன்முறையை முன்னெடுத்து, சிறுவர் தொழிலின் எல்லா வகைகளையும் தடுப்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் அவசரமாக முயற்சித்தது. அந்த இலக்கானது முழுமையாக அடையப்பட முடியாது போன அதேவேளை, குறித்த நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடு உள்ளடங்கிய வழிகாட்டியொன்று (Road map) உருவாக்கப்பட்டது. அத்துடன் பல்வேறு கொள்கைகளினதும் நிகழ்ச்சித்திட்டங்களினதும், அவற்றினூடாகச் சிறுவர் தொழில் எவ்வாறு கையாளப்படலாம் என்பது உள்ளிட்ட மீளாய்வும் அதனைத் தொடர்ந்த சிபார்சுகளும் செய்யப்பட்டன. அதன் பெறுபேறாக இந்த சிறுவர் தொழில் பற்றிய தேசியக் கொள்கை உருவாவதற்கான சிறந்ததோர் அடித்தளமாக, இலக்கை அடைவதற்காக ஒன்றிணைந்து முயற்சிக்கும் நடவடிக்கையான மாவட்டரீதியாக உள்ளீர்க்கும் உபாயம் உருவாகியது.

தொழில்நுட்ப ரீதியான ஆதரவுடன் கூடிய பல்வேறு காரணங்களால், இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலின் மோசமான வடிவங்களை இல்லாதொழிக்கும் இலக்கு சாத்தியமாகக்கூடியதாக உள்ளது. 2009 இல் முடிவுற்ற முரண்பாடுகளின் பின்னரான அரசியல் நிலவரம் சமாதானத்திற்கும் நிலைத்த தன்மைக்கும் சாதகமாக உள்ளது. சிறுவர் தொழிலானது நிலைத்த கொள்கைகள் மற்றும் செற்பாடுகளினூடாக ஒன்றிணைந்து கையாளப்பட்டால், நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்தி இலக்குகள் அடையப்பட முடியும்.

கொள்கைகளும் சட்டங்களும் நாளதுவரைப்படுத்தப்பட்டு, இலங்கைச் சிறுவர்களுக்கான எதிர்பார்ப்புகளுடனும், நாட்டின் அபிவிருத்தி இலக்குகளுடனும், சிறுவர் மீதான பிராந்திய மற்றும் சர்வதேச கடப்பாடுகளுடனும் ஒத்திசைவானதாக இருக்கும்போது, அவை சிறுவர் தொழில் பிரச்சினையைக் கையாள்வதற்குரிய பிரிக்க முடியாத முக்கிய பாகமாகவும், இளைஞர்களுக்கான 'சீரிய வேலை' வாழ்க்கை அணுகுமுறையாகவும் இருக்கும். இவ்வாறான கொள்கைகளினதும் சட்டங்களினதும் தாக்கங்கள் அவற்றின் பயனுறுதி வாய்ந்த வினைப்படுததலிலும் அமுலாக்கத்திலுமே தங்கியுள்ளது.

# 04

## கொள்கையின் இலக்குகள்

சிறுவர் தொழில் பற்றிய தேசியக் கொள்கையானது, சிறுவர் தொழிலைத் தடுப்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் அதன் மோசமான வடிவங்களுக்கு முன்னுரிமை வழங்கி, பங்களிப்புச் செய்யும். இது பயனுறுதி வாய்ந்த வினைப்படுத்தல், முக்கிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் சிறுவர் தொழிலுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை உள்ளீர்த்தல், தேசிய மற்றும் உப-தேசிய மட்டங்களில் முக்கிய பங்காளர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள், 'சீரிய வேலை' என்னும் கருதுகோளில் ஒரு நிலைத்த வாழ்க்கை அணுகுமுறையை குறிப்பாக இலங்கையின் இளைஞர்களுக்கு, ஊக்குவித்து வசதியளித்தல் ஆகியவற்றினூடாகச் செயற்படுத்தப்படும்.

# 05

## கொள்கையின் எல்லை

சிறுவர் தொழில் பற்றிய விடயங்கள் பன்முகப் பிரச்சினைகளால் சூழப்பட்டுள்ளதுடன், பல்வேறு நிறுவனங்களினூடாகப் பன்முகத் தீர்வுகளை எதிர்பார்த்துள்ளது. குடித்தன வறுமை, சமூகப் பாதுகாப்பு கிடைக்காமை, அதிர்ச்சிகள், பாடசாலைகளை அடைய முடியாதுள்ளமை போன்ற காரணிகள் சிறுவர்களை வேலைத்தலங்களை நோக்கித் தள்ளுகின்றன. இவ்வேலைத்தலங்களில் உட்புகுவதற்கான பாதுகாப்பற்ற நிலையங்களூடாக, பிரதானமாக கிராமிய மற்றும் நகரப் பொருளாதாரங்கள் இவ்வாறான பாதிக்கப்படக்கூடிய சிறுவரை இலாபகரமாக உறிஞ்சிக் கொள்கின்றன. இவர்கள் திறன் குறைந்த கல்வியறிவற்ற சாதாரண தொழிலாளர்களாக இருப்பர். போதுமானதாக இல்லாத தொழில் நிருவாகப் பரிசோதனைகள் இவ்வாறு சிறுவர்கள் பலியாவதற்கும், தடைசெய்யப்பட்ட பாதுகாப்பற்ற வேலைகளில் ஈடுபடுவதற்கும் இடமளிப்பதுடன், இதைப்பற்றி அறிந்திராத பொதுமக்கள் இந்த அவலநிலை மீது மிகக் குறைந்த அளவில் கவனஞ்செலுத்துவதற்கோ அல்லது கவனிக்காமலே இருப்பதற்கோ இடமளிக்கிறது.

இலங்கையில், ஏனைய நாடுகளைப் போலவே, சிறுவர் தொழில் என்ற விடயமானது மத்திய மட்டத்திலுள்ள பல்வேறு அமைச்சுக்களினதும் அவற்றின் கீழுள்ள திணைக்களங்களினதும் மாகாண, மாவட்ட மட்டங்களிலுள்ள அலுவலகங்களினதும் ஆணையின் கீழ் வருகின்றது. *இந்தக் கொள்கையானது அடிப்படையில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினூடாக* பெண்கள், இளையோர் மற்றும் சிறுவரது தொழில்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் (1956 இன் 47 ஆம் இலக்கச் சட்டம்), குறிப்பாக மார்ச் 2011 இன் 1695/32 ஆம் இலக்க அபாயகரமான தொழில் ஒழுங்குவிதிகள் (சட்டத்தின் பிரிவு 20A யுடன் தொடர்பானது) ஆகியவற்றை அமுல் படுத்துவதனூடாக நேரடியாகப் பிரயோகிக்கப்படும்.

*சிறுவர் தொழிலில் தாக்கம் செலுத்தத்தக்க மற்றைய சட்டங்கள், பொதுக் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களினூடாக சிறுவர் தொழில் தொடர்பான இந்தத் தேசியக் கொள்கை பிரயோகிக்கப்படும்.* ஏனைய சட்டங்களுள் தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம், கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம், சம்பளச்சபைகள் கட்டளைச்சட்டம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டம், தண்டனைச் சட்டக்கோவை, கட்டாய பாடசாலை வருகை ஒழுங்குவிதிகள், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுச் சட்டம் ஆகியனவும் உள்ளடங்கும். நீதி, சமூக சேவை, பொலிஸ், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், இளைஞர் விவகாரம் ஆகியன உள்ளிட்ட ஆனால் இன்னும் இதில் அடங்கக்கூடிய முக்கிய விடயங்களுடனான ஒருங்கிணைப்பையும் இது வேண்டி நிற்கும். *சிறுவர் தொழில் தொடர்பான இந்தத் தேசியக் கொள்கையானது தொழில்கொள்வோரதும், தொழிலாளர்களதும் அமைப்புகளதும், துறைகளுக்குரிய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களதும் முகவர்களதும் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான பங்களிப்பினூடாகவும் பிரயோகிக்கப்படும்.* இது அவர்களது ஒருங்கிணைந்த முயற்சிகள் செயற்பாடுகள் ஆகியவற்றின் உள்ளீர்த்தலுடன் நடைபெறும்.

## 06

# கொள்கையினால் பயன்பெறுவோர்

சிறுவர் தொழில் பற்றிய தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் அமைச்சு மற்றும் அதன் ஒத்துழைப்பாளர்களும் பங்காளர்களும் எடுக்கும் நடவடிக்கையின் பலனாக 100,000 மேற்பட்ட சிறுவர்கள் நேரடியாகப் பயன் பெறுவார்கள்[12] என மதிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர் தொழிலில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் உள் நுழைவதனை இது தடுக்கும்.

- முதலாவதும் முக்கியமானதுமாக, அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு உள்ள, ஏறக்குறைய 64,000 சிறுவர்களும் இளையோர்களும் அபாயகரமான தொழில்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, பொருத்தமான கல்வி, பயிற்சி, புனர்வாழ்வு மற்றும் ஒன்றுதிரட்டிய சேவைகளினூடாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
- ஆட்கடத்தல் அல்லது ஆபத்துகளில் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்கள், அதாவது கடத்துதலும் விற்றலும், பலவந்தப்படுத்தப்பட்ட தொழில் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்.
- விபச்சாரம் அல்லது பாலுணர்வைத் தூண்டும் உற்பத்திகள் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்.
- குறிப்பாக போதைப்பொருட்கள் உற்பத்தியும் கடத்தலும், மது மற்றும் ஏனைய சட்டவிரோத பொருட்களுடன் சம்பந்தப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள, மதிப்பீடு செய்வதற்குச் சிரமமான எண்ணிக்கையான சிறுவர்கள்.

மறைமுக நன்மையைப் பெறுவோரும் இளையோராவார். இவர்களுடன் கல்வியறிவு பெற்ற திறனுடைய போட்டியிடத்தக்க வேலையாளர்களைக் கொண்ட தொழிற்துறைகளும், “சிறுவர் தொழிலற்ற” நிலைத்திருக்கக்கூடிய தாக்கம் அடையப்பெற்ற பின்னர், அதனை உறுதிப்படுத்தக்கூடிய வினைத்திறனுடைய அரசாங்க முறைமைகளும் மறைமுகமாக நன்மையடைவர்.

## 07

# அமுல்படுத்துதல்

### 7.1 நிறுவனக் கட்டமைப்புகளும் பொறிமுறையும்

சிறுவர் தொழில் பற்றிய கொள்கையை அமுல்படுத்திக் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பான ஆரம்பப் பொறுப்பு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சிற்கு உரியதாகும்.

தேசிய மட்டத்தில், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரால் தலைமை தாங்கப்படும் சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது சிறுவர் தொழில் தொடர்பான விடயத்திற்குரிய ஒருங்கிணைப்பு அமைப்பாகவும், இக்கொள்கையை அமுலாக்குவதற்கான ஆலோசனை அமைப்பாகவும் தொழிற்படும். இந்த தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது, முக்கிய அரச நிறுவனங்களாலும் அமைக்கப்பட்டிருக்கும். ஐக்கிய நாடுகள் சபையின் / சர்வதேச முகவர்களின், குறிப்பாக சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) மற்றும் ஐ.நா. சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் (UNICEF) பிரதிநிதிகளும், சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவால் தீர்மானிக்கப்படும் ஏனைய நிறுவனங்களும் அல்லது முகவர்களும் ஆலோசனை கூறுவோர் என்ற வகையில் இதில் இணைந்து கொள்ளலாம். இது தொடர்பான சகல நிறுவனங்களினதும் மற்றும் முகவர்களினதும் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார்களா என்பதை உறுதிப்படுத்தியும், கொள்கை தொடர்பாகவும் இந்தக் குழு மாற்றியமைக்கப்படும்.

*சிறுவர் தொழில் தொடர்பான ஒரு விசேட அலகு,* தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் உள்ள தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படத்தக்கதாக அமைக்கப்படும். கொள்கை அமுல்படுத்தலுக்கான செயலகமாக அது சேவையாற்றும். அது மாகாண மற்றும் மாவட்ட அமைப்புக்களுடன் நெருக்கமாக செயலாற்றுவதுடன், ஏனைய ஒத்துழைப்பு பங்காளிகளுடனும் செயலாற்றும். அத்துடன் 25 மாவட்டங்களிலும் சிறுவர் தொழில் நிலைமைகளை கண்காணிப்பதும் மதிப்பிடுவதும் அதனது பொறுப்பாகும்.

---

[12] அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ள மற்றும் தொழிலிலமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை, சிறுவர் செயற்பாட்டு அளவீடு - 2008ஃ09 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. கொள்கை மூலமாக நன்மையடைவோர் அதன் அமுலாக்கத்தின்போது புதிய மதிப்பீடுகளின் மூலம் திருத்தியமைக்கப்படலாம்.

அமைச்சு, மாகாணங்கள் மற்றும் மாவட்டங்கள், அவற்றின் செயற்பாடுகளை ஒன்றிணைத்த வகையில் முன்னெடுத்து செல்லுவதற்காக, ஒருங்கிணைப்பு, அறிக்கையிடுதல் மற்றும் ஏனைய வேலைப் பொறிமுறைகள் தொடர்புகளை இந்த அலகுடன் பேணுதல் வேண்டும். ஒவ்வொரு மாவட்டமும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல் நிலையினை அடைந்துள்ளனவா என்ற நிலைமை, இந்த அலகினால் மதிப்பிடப்பட்டு, சரிபார்க்கப்படும், அதன் பின்பு, அவ்வாறான ஒவ்வொரு மாவட்டமும் சிறுவர் தொழிலற்ற மாவட்டம் என அந்தப் பிரிவு உறுதிசெய்வதுடன், அந்நிலைமை பூரணமாகப் பலப்படுத்தப்படும்வரை அவ்வலகினால் தொடர்ச்சியாக அறிக்கையிடப்படும். அதற்கிணங்க, சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு, அந்த மாவட்டம் அல்லது பிரதேசம் சிறுவர் தொழிலற்ற மாவட்டம் அல்லது பிரதேசம் என்பதைத் தீர்மானிக்கும்.

*மாகாண மட்டத்தில்,* மாகாணச் செயலகமானது தமது மாகாணத் திட்டங்களில் சிறுவர் தொழில் சம்பந்தமான அக்கறைகளையும் பிரதிபலிப்புகளையும் ஒன்றிணைத்து, சிறுவர் தொழிலுக்கு எதிரான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிப்படுத்தும்.

*மாவட்ட மட்டத்தில்,* மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக் குழுவானது சிறுவர்களுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஒருங்கிணைத்தல் வகிபாகத்தினைக் கொண்டிருக்கும். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவானது சிறுவர் தொழிலுக்கு எதிரான ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்கு உதவக்கூடிய வளங்களைக் கொண்டுள்ளது. மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக் குழுவிற்குரிய தலைவர் என்ற வகையில் மாவட்டச் செயலாளர், சிறுவர் தொழில் பிரச்சினைகள் பற்றிய அக்கறைகளும் பிரதிபலிப்புகளும் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களில் பயனளிக்கக்கூடிய வகையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்த முடியும். அத்துடன் மாவட்ட மட்டக் குறிக்கோளை அடைவதற்கு போதியளவான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணமும் மாவட்டமும் தொழில் அமைச்சுடன் கலந்தாலோசிப்பதன் மூலம், இக்கொள்கையை அமுல்படுத்துவதற்கு மிகவும் சாத்தியமானதும், செலவு குறைவானதுமான சிறந்த இடங்களாக மாற்றியமைக்கப்பட்டு, ஒழுங்குபடுத்திக் கொள்ளப்பட முடியும்.

## 7.2 மாகாண மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு

இக்கொள்கை வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதற்கு, பரந்த வகையில் பங்காளர்களினாலும் பங்குதாரர்களினாலும் இது உள்ளெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உள்ளக நிலைமைகளில் வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கு இது இட்டுச்செல்லும். கிடைமட்டத்திலும் நிலைக்குத்து மட்டத்திலும் அமுல்படுத்துபவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு தேவைப்படும். மத்திய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம அலுவலர் மட்டங்களில் இது உறுதிப் படுத்தப்படும். ஆகவே, தொழில் அமைச்சு ஒருங்கிணைப்புக்கானதும் ஒத்துழைப்பிற்கானதுமான, உரிய மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகளுடனான பொறிமுறைகளைப் பலப்படுத்த வேண்டும்.

தொழில் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் பிரதானமாக அமுல்படுத்தப்படும் பொறிமுறைகளின் அடிப்படைகளாவன: தொழில் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகாரங்கள் அமைச்சின் நன்னடத்தைத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், நீதி, கல்வி, சுற்றுலாத்துறை, மீன்பிடி, விவசாய, இளைஞர் விவகாரங்கள், திறன் அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்கள், சட்டமா அதிபதி திணைக்களம், தொழில்தருநர்களின் மற்றும் தொழிலாளர்களின் அமைப்புகள், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், ஆசிரியர்கள் மற்றும் அவர்களுடைய நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் அவர்களுடைய சங்கங்கள், பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிச் சேவையை வழங்குபவர்கள், ஊடகம் மற்றும் பலவாகும்.

மத்திய நிறுவனங்கள் கொள்கை வகுப்பதிலும் மற்றைய உரிய கொள்கைகளுள் இதனை உள்ளீர்ப்பதிலும் இணக்கப்படுத்துவதிலும் முன்னணி வகிக்கும் அதேவேளை, மாவட்டம், பிரதேசம், கிராம அலுவலர் (கிராமம்) ஆகியோர் கொள்கை அமுல்படுத்தல் மற்றும் வினைப்படுத்தலில் முன்னனி இடத்தை வகிப்பர்.

மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகள் (மிகவும் சாத்தியமான அவர்களுடன் தொடர்புடைய விடயங்களினுள்) நடைமுறையிலிருக்கும் அல்லது பதிய குழுக்கள்/ செயற்குழுக்களை ஒழுங்குபடுத்தி உரிய மாகாண அல்லது மாவட்டத்தினுள், அமைச்சுடன் இணைந்து கொள்கை அமுல்படுத்தல் வேலையை அவர்களுக்கு ஒப்படைக்கலாம். இவை நடைமுறையிலிருக்கும் சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் அல்லது அவர்களுடைய உப குழுக்கள் போன்றதாகும். அவை சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில், சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு, பொலிஸ், ஆலோசகர்கள் போன்ற மற்றும் தொழில்கொள்வோரது, தொழிலாளர்களது நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக நிறுவனங்கள், ஏனையவர்களையும் உள்ளடக்கிய பல்துறை சார்ந்ததாகும்.
மாகாண மற்றும் மாவட்ட நிருவாகத்தினால் அவர்களுடைய மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் *சிறுவர் தொழிலுக்கான 'குவி மையங்கள்'* (Focal points) நியமிக்கப்படுவார்கள். சிறுவர் அபிவிருத்திச் செயற்குழு அல்லது உபகுழுக்களை ஒருங்கிணைத்தல், பிரச்சினைகளை உள்ளீர்ப்பதற்காக நிறுவனங்களுக்கு இடையிலான

ஒத்துழைப்புக்கு வசதியளித்தல், நடவடிக்கையை அமுல்படுத்துதல் ஆகியவற்றில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

## 7.3 தொழில்கொள்வோரதும் தொழிலாளரதும் நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு

இளம் வேலையாட்களின் சட்டபூர்வமாக வேலை செய்யும் வயதை உறுதிப்படுத்துவதிலும், சிறுவர் தொழிலை தடுப்பதிலும் முடிவுறுத்துவதிலும் பாரிய பங்கினையும் பொறுப்பினையும் தொழில் கொள்வோரினதும், தொழிலாளர்களினதும் நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன.

சிறுவர் தொழில் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மீதான அக்கறைகளை தொழில் கொள்வோரினது தொழிலாளர்களினது நிறுவனங்களது கொள்கைகளிலும் ஆணைகளிலும் உள்ளீர்ப்பது சிக்கலானதாகும். தேசிய சிறுவர் தொழில் ஒருங்கிணைப்புக் குழுவிலுள்ள, தொழில் அமைச்சு மற்றும் தொழில் தருநர்களினதும் தொழிலாளர்களினதும் பிரதிநிதிகள் இது தொடர்பாக, இலக்குகள், பயிற்சி உள்ளிட்ட குறித்த நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அவற்றின் அமுல்படுத்தலை எளிதாக்கலாம்.

திறன் மிக்க வினைப்படுத்தல், தடுத்தல் மற்றும் சிறுவர் தொழிலிலிருந்து சிறுவர்களை மீட்டெடுத்தல் என்பவை, ஏனைய அபிவிருத்தி சேவைகள் மற்றும் பயிற்சி, கல்விக்கான தடங்கலற்ற மாற்றங்களுடன் சேர்த்துப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அது குடும்பங்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இணையவும் மற்றும் வயது கூடிய சிறுவர்கள் வேலைக்கான சட்ட வயதில் தொழில் படையில் நுழைவதற்கான தகுதிகளுக்கு இட்டுச்செல்லவும் உதவும்.

## 7.4 தனியார்துறையுடனான ஒத்துழைப்பு

பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்பிற்கு மேலதிகமாக, தனியார்துறையானது அதனது தோற்றத்திலிருந்து சிறுவர் தொழில் பிரச்சினையை அவர்களின் முறையான துறைகளினுள் கையாளுவதற்கும், கொள்கைகளையும் செயற்பாடுகளையும் உரிய வகையில் கொண்டிருப்பதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இது ஒருவகையில் தேசிய சட்டங்களுடன் இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதாகவும், மறு வகையில் இலங்கையின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கு கல்வியறிவுள்ள மற்றும் தகுதியுள்ள, வயது குறைவாக இல்லாத சிறுவர்களை முறைசார் மற்றும் முறைசாராத வழங்கல் சங்கிலிக்குப் பங்களிப்பதாகவும் இருக்கும். இது தொடர்பாக, பிரதான துறைகள் மற்றும் உப துறைகளாவன: சுற்றுலாத்துறை, மீன்பிடி மற்றும் பெருந்தோட்டத்துறை ஆகியனவாகும். வீட்டுத் தொழிலில் சிறுவரை ஈடுபடுத்துதல் உட்பட்ட முறைசாராப் பொருளாதாரம் மிகவும் கவனமெடுக்கப்படவேண்டிய பாரிய விவகாரப் பரப்பெல்லையாகும்.

சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிலுள்ள தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு மற்றும் தொழில்கொள்வோரினதும் தொழிலாளர்களினதும் பிரதிநிதிகள், இது தொடர்பாக இலக்குகள், பயிற்சி உள்ளிட்ட குறித்த நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அவற்றின் அமுல்படுத்தலை எளிதாக்கலாம்.

# 08

## கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய உபாயங்கள்

### 8.1 பரந்த கொள்கைகளுடனும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளுடனும் ஒன்றிணைத்தல்

தேசிய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதலிலும் அமுல் படுத்துவதிலும் அவற்றின் வரவு செலவுத் திட்டத்திலும், இளையோர்கள் மற்றும் சிறுவர்களின் அவா மற்றும் தேவைகளை ஒன்றிணைப்பதற்கு சிறுவர் தொழில் பற்றிய தேசிய கொள்கை முன்னுரிமையை வழங்க வேண்டும். அவ்வாறாயின், சிக்கலான சிறுவர் தொழிற் சம்பவங்களுக்கு ஒன்று சேர்க்கப்பட்டதும் பரந்தளவிலுமானதுமான பிரதிபலிப்புக்கள் அளிக்கப்படும்.

சிறுவர் தொழில் தனித்துவமானதாக இருப்பதில்லை. ஆகவே வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும், குடும்ப வாழ்க்கைத் தரத்தையும் வருமானத்தையும் உயர்த்துவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். எனவே குடும்பங்கள் பொருளாதாரப் பொறுப்புக்களை பக்குவமடையாத சிறுவர்கள் மீது சுமத்தமாட்டாது. இது தொடர்பாக முக்கியமான விடயங்களாவன:

- தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை - 2012 மற்றும் இளையோர் தொழில் தொடர்பான தேசிய நடவடிக்கைத் திட்டம் - 2006 என்பவற்றில் குறிப்பிட்டுள்ளவாறான வயது வந்தவர்களுக்கான ‘சீரிய வேலை’.
- தேவையுள்ள குடும்பங்களுக்கு ‘சமுர்த்தி’ போன்ற சமூக நலன்புரி நடவடிக்கைகளின் முன்னேற்றகரமான விஸ்தரிப்பு சிறுவரைப் பேணுவதற்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலன்புரி நடவடிக்கைகள்.
- கல்விக்கும், பொருத்தமான தொழிலொன்றைச் செய்வதற்கான பயிற்சிக்குமான பொருத்தமானதும் போதுமானதுமான வசதிகள், உள்ளீடுகள், சிறுவருக்கான மற்றும் இளையோருக்கான தேவைகளை வழங்குவதற்கும் அணுகுவதற்குமான ஏற்பாடுகள்.
- சிறுவருக்கான மற்றும் இளையோருக்கான பாதுகாப்பையும் நலன்களையும் வழங்குவதற்கான பொருத்தமானதும் போதுமானதுமான வசதிகள், அவர்களது முன்னேற்றத்திற்கான ஊக்குவிப்புகள்.

சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது, பெண் பிள்ளைகள், மிகவும் வயதில் இளைய பிள்ளைகள், ஆட்கடத்தல் காரணமாக மற்றும் தமது சொந்தக் குடும்பத்தினரை விட்டுப் பிரிந்து வாழும் இடம் பெயர்ந்த சிறுவர்கள், பாதுகாப்பற்ற சிறுவர்கள் ஆகியோரது நிலவரங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துகிறது.

### 8.2 தொழிலிலமர்த்துவதற்கான ஆகக்குறைந்த வயதை அதிகரிப்பதற்கான முயற்சி

1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களைத் தொழிலிலமர்த்துதல் பற்றிய சட்டத்துடன் சேர்ந்து, சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது, 18 வயதிற்குக் குறைந்த சிறுவர் மற்றும் இளையோருக்கு ஏற்புடைத்தாகின்றது. இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ‘சிறுவர் ஒருவர் 14 வயதிற்குக் குறைந்த ஓர் ஆள் எனவும், இளையோர் ஒருவர் 14 வயதை அடைந்த ஆனால் 18 வயதிற்குக் குறைந்த ஓர் ஆள் எனவும்’ கூறப்பட்டுள்ளது. 2011 இன் அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் 18 வயதிற்குக் குறைந்த சிறுவருக்கும் இளையோருக்கும் ஏற்புடைத்தாகின்றன.

தொழிலிலமர்வதற்கான ஆகக்குறைந்த வயது, கட்டாயப் பாடசாலைக் கல்வியை முடிப்பதற்கான வயதிற்கு, அதாவது 16 வயதிற்குக் குறைவாக இருத்தலாகாது. கட்டாயப் பாடசாலைக் கல்வியை முடிப்பதற்கான வயது 16 ஆக அதிகரிக்கப்பட்டதனால், தொழில் அமைச்சு, தொழிலில் அமர்வதற்கான ஆகக்குறைந்த வயதையும் கட்டாயப் பாடசாலைக் கல்வியை முடிப்பதற்கான வயதுடன் பொருந்தச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்.

### 8.3 அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகளை வினைத்திறனாக அமுல்படுத்துதலை ஊக்குவித்தல்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, அபாயகரமான தொழில்களுக்கான ஒழுங்குவிதிகளை, குறிப்பாக விஞ்ஞான தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களையும், நாட்டின் வேகமான அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு, காலத்துக்குக் காலம் மீள்பரிசோதனை செய்து, மறுசீரமைக்கலாம்.

அபாயகரமான தொழில்களுக்கான ஒழுங்குவிதிகள் பற்றி அறிவூட்டல்களை மேற்கொள்வது, இலக்குவைக்கப்பட்ட துறைசார் அமுல்படுத்தல் பொறிமுறை, குடும்பங்களும் சமூகங்களும் உட்பட, வேலைத்தலங்களில் பொதுவான பிரசாரங்களூடாக மேற்கொள்ளப்படும்.

## 8.4 தொழிலிலமர்த்துவதற்கான நிபந்தனைகளைக் கட்டாயப்படுத்துதல்

1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களைத் தொழிலிலமர்த்துதல் பற்றிய சட்டத்தில் தரப்பட்டுள்ள தொழிலிலமர்த்துவதற்கான நிபந்தனைகளைக் கட்டாயமாக்குவதை அமைச்சு ஊக்குவிப்பதுடன் உரிய வகையில் வினைப்படுத்தும். இது பயிற்சி, கொள்கைரீதியான நடவடிக்கைகள், நிதி ஒதுக்கீடுகள் வழங்கி தொழில் அலுவலர்களது எல்லைகளை முறைசாரா வேலைத்தலங்களுக்கும் நீடித்தல் ஆகியவற்றினூடாக, தொடர்ச்சியாக மேம்படுத்தப்படும்.

### 8.4.1 இளையோருக்குப் பயிற்சியளித்தல்

பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி அல்லது தொழில்நுட்பக்கல்விக்கான பாடசாலைகளின் பொறுப்பேற்புடன், தொழில்ரீதியான பயிற்சிகளில் ஈடுபடும் சிறுவர் மற்றும் இளையோருக்கான நிபந்தனைகளுக்குரிய, பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான (தொழில்ரீதியான பாதுகாப்பும் சுகாதாரமும் உள்ளிட்ட) தரங்களை அமைச்சு உறுதிப்படுத்தும். சட்டரீதியாக வேலைசெய்யும் வயதை அடைந்த இளையோருக்கு, வேலை நிபந்தனைகள் ஒழுங்காகவும் கவனத்துடனும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும் என்பதுடன், சிறுவர் இளையோர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பொருத்தமான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட வேண்டும்.

### 8.4.2 நிறுவனங்களுக்குள்ளும் நிறுவனங்களுக்கிடையேயும் ஒத்துழைப்பிற்கான பொறிமுறை

சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது, வேலைத்தலங்களிலுள்ள இளையோர் தமது அதே வயதிலுள்ள இளையோர் சிறுவர் பாதுகாப்பு மற்றும் கவனிப்புக்குரிய சேவைகளால் நன்மையடைவதைப் போன்று, அவர்களும் நன்மையடைவதை உறுதிப்படுத்துவதிலுள்ள மிகச் சிரமமான நிலைமையை அடையாளங் கண்டுள்ளது. இது தொழில் நிருவாகத்திற்கான சேவைக்கும் சிறுவர் மற்றும் இளையோருக்கான கல்வி, பயிற்சி, நலன்புரி, வழிகாட்டல், பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களங்களுக்கும் மற்றும் முகவர்களுக்கும் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பிற்கு அழைப்பு விடுக்கின்றது.

## 8.5 சட்ட நடவடிக்கைகளைப் பலப்படுத்துதல்

1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களைத் தொழிலிலமர்த்துதல் பற்றிய சட்டத்தின், அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகளின் மற்றும் ஏனைய பொருத்தமான சட்டங்களின் வினைத்திறன் மிக்க பிரயோகத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான விடயங்களைத் தாபிப்பதில் அதிமுக்கியத்துவம் வழங்கப்படுவதையும், அவற்றின் பிரயோக வெளிப்பாடுகளைக் கண்காணிப்பதையும் சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது கவனத்திற் கொள்கிறது.

### 8.5.1 பயிற்சி

தொழிற் பரிசோதனைகளையும் அவற்றுடன் தொடர்புபட்ட சேவைகளையும் பலப்படுத்துதலானது பயிற்சி, மீள்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களூடாகவும், வளங்கள் மற்றும் கருவிகள், 1956 இன் மேற்படி சட்டத்தின் கீழ் சிறுவருக்கும் இளையோருக்குமான சட்டக்கல்வியில் ஈடுபட அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட வேலைத்தலங்களை அணுகுவதற்கு வசதியளித்தல் ஆகியவற்றினூடாக அடையப்படும்.

### 8.5.2 வயதைச் சரிபார்த்தல்

சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையானது, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு வயதைச் சரிபார்க்கும் முறைமையை, அது தொழில் கொள்பவர்களது இடாப்புகளினூடாக அமுல்படுத்தப்படுவது நடைமுறைச்சாத்தியமற்றதாக உள்ளபோது, சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனங்களுடன் சேர்ந்து அமுல்படுத்துவதைக் கோரி நிற்கிறது. இவற்றில் முறைசாராப் பொருளாதாரம் அல்லது இடத்துக்கிடம் சென்று செய்யும் தொழில் ஏதேனும் சம்பந்தப்படுமாயின், அவற்றில் ஈடுபடுவதற்கு சிறுவர் அல்லது இளையோர் எவருக்காவது அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்போது, அல்லது அவர்கள் அவ்வாறு ஈடுபடுவதற்கான அவர்களது தகுதிகளைக் காட்டும் ஏனைய ஆவணங்கள் சம்பந்தப்படும்போது வயதைச் சரிபார்த்தல் அமுல்படுத்தப்படும். அரசாங்கம் எல்லாச் சிறுவர்க்கும் இளையோருக்கும் தேசிய அடையாள அட்டைகளை வழங்க முயற்சி எடுக்கலாம்.

### 8.5.3 தொழிற் பரிசோதனைகளில் ஒன்றிணைந்த அணுகுமுறை

முடியுமான வரை, தொழில் நிருவாகத்திற்கான சேவைகள் மற்றைய பரிசோதனை முறைமைகளுடனும் சேவை வழங்குநர்களுடனும், குறிப்பாக கல்வி, பயிற்சி, நலன்புரி, இளையோருக்கான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடையோரோடு நெருங்கிய ஒத்துழைப்பைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எல்லைகளையும் உள்ளடக்கங்களையும் விரிவுபடுத்துவதற்கும், மட்டுப்பாடான மூலவளங்களை அதிகூடிய வகையில் பெற்றுக்கொள்வதற்கும் சமூகக் கண்காணிப்பு முறைமைகளுடன் தொடர்புகளைப் பேணுவதனூடாக தொழில் நிருவாகத்திற்கான சேவைகள் நன்மையடையும்.

### 8.5.4 வினைத்திறன் மிக்க சட்ட நடவடிக்கையும் தண்டனையும்

அமைச்சும் பொலிஸ் திணைக்களம், நீதி அமைச்சு போன்ற அதன் பங்களிப்பு நிறுவனங்களும் வினைத்திறன் மிக்கதும் உரிய நேரத்தில் செயற்படுத்தப்படுகின்றதுமான சட்ட நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல் வேண்டும்.

சட்டங்களின் தேசிய ரீதியிலான ஏற்பாடுகளை மீறுவதற்கான, பொருத்தமாயின் வழங்கப்படும் குற்றவியல் தண்டனைகள் உள்ளிட்ட, தண்டனைகளின் பிரயோகம், நட்டஈடுகள், சிறுவரைக் கல்விப்பாதையில் மீளச் சேர்த்தல், தொழிலுக்கான ஆகக்குறைந்த வயதை அடைந்தோருக்கு சாத்தியமானதும் சீரியதுமான (decent) மாற்றீடுகளை வழங்குதல் - பின்னர் தனிப்பட்ட சிறுவர் ஒவ்வொருவரினதும் இயலுமைகளது வெளிப்படுத்தல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தலை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கும் வசதியளித்தல் வேண்டும்.

### 8.6 முறைப்பாடு செய்யும் செயன்முறையைப் பேணுதல்

தொடர்புடைய சட்டங்களில் அனுமதிக்கப்பட்டவாறு முறைப்பாடு செய்யும் செயன்முறைகள் பேணப்படுதல் வேண்டும். சட்ட ஏற்பாடுகளின் மீறல்களை சட்டபூர்வமாக வெளிப்படுத்துவோர் மீதான பழிவாங்கல்கள் மற்றும் பாரபட்சங்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. உதவும் வழிவகைகள் மற்றும் தொடர்பு கொள்வதற்கான இடங்கள் போன்றன, ஏனைய முகவர் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்படும். 1979 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் உள்ள குறைகேள் அதிகாரிகளைப் போன்று, மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு தொழில் அமைச்சின் வேலைகளும் பூர்த்தியடைய வேண்டும்.

தண்டனைச் சட்டக்கோவையினாலும், தொழிற் சுரண்டல்களிலிருந்து சிறுவரை மீட்டெடுப்பதற்கு ஆதரவளிக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தினாலும் ஆணை வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களான பொலிஸ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றுடன், தொழில் திணைக்களத்தினூடாக தொழில் அமைச்சு நெருக்கமாகப் பணியாற்றுகிறது.

09



## தொடர்பாடல்: செவிமடுத்தலும் பின்னூட்டலும்

தொழில் அமைச்சும், சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு அங்கத்தவர்களும் விழிப்புணர்வினூடாக அறிவூட்டுதலை மேற்கொள்வதுடன், சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையை தமது உரிய தரப்பார் ஊடாக அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பர். தேசிய ஒருங்கிணைப்புக் குழு பரவச் செய்யும் மற்றும் பின்னூட்டல் பொறிமுறைகளையும் உருவாக்கும்.

10



## மூலவளங்கள்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சும், சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு அங்கத்தவர்களும், தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதியளிப்பு வசதிகளைக் கோருதல், சம்பந்தப்பட்ட முகவர்களது வரவு செலவுத்திட்டங்கள், சிறுவர் தொழிலுக்கு எதிரான ஏற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மேலதிக நிதி ஒதுக்கீடுகள் ஆகியன உள்ளிட்ட விடயங்களுக்கான மூலவளங்களைப் பயன்படுத்துதல் பற்றிய ஒரு திட்டத்தைத் தயாரிப்பர். உரிய கொள்கைகள் பற்றிய அவர்களது பகுப்பாய்வு, நீடித்து நிலைத்த அபிவிருத்தி இலக்குகளுடனான (SDGs) தொடர்புகள், மற்றைய உரிய கட்டமைப்புகள் ஆகியன தேசிய மற்றும் வெளிவாரியான மூலவளங்களைத் தேடும் முயற்சியைப் பலப்படுத்தும்.

# 11

## மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்

பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், முன்னேற்றத்தை மதிப்பிடல், அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றல், அந்த அனுபவங்களின் காரணமாக சீரமைத்தல் ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்கான நிறுவனரீதியான உள்ளக மீளாய்வு, தொழில் அமைச்சினால் வருடந்தோறும் பொறுப்பேற்கப்படும். இதிலிருந்தான கண்டுபிடிப்புகள் சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானங்களின் பிரகாரம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

# 12

## அபாயமும் சவால்களும்

இந்தக் கொள்கையானது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரது தலைமையின் கீழ், வினைத்திறன் மிக்கதும் தன்னிறைவு மிக்கதுமான ஒரு தொழிற் பரிசோதனை முறைமையினூடாகவும், வினைத்திறன் மிக்க உள்ளீர்க்கும் உபாயத்தினூடாகவும் சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குப் பணிப்பதுடன், அப்பணிப்பின் கீழ் மாவட்டங்களும் சமூகங்களும் பாதிக்கப்பட்ட சிறுவருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சேவைகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.

இக்கொள்கையின் வெற்றியானது, அபாயங்களையும் சவால்களையும் அறிந்து அவற்றைச் சமாளிப்பதிலேயே தங்கியுள்ளது. குறிப்பாக சில நிறுவனங்களும் குழுக்களும் கொள்கையை அமுலாக்கும் ஆரம்பக் கட்டங்களில் அபாயங்களையும் சவால்களையும் எதிர் கொள்ளலாம். இக்கொள்கையை அமுல்படுத்துவதற்க் கட்டாயமாகத் தேவைப்படும் தன்னிறைவும் மூலவளங்களும் இல்லாத *திணைக்களங்களும் முகவர்களும்;* சிறுவரைத் தொழிலில் ஈடுபடுத்தும், ஆனால் எதிர்காலத்தில் சிறுவர் தொழிலாளர்களைக் கொண்டிருக்க முடியாத *தொழில்கொள்வோர்;* தமது சிறு பிள்ளைகளது வருமானத்தில் தங்கியிருக்கும் அதேவேளை, அதற்குப் பதிலீடுகளைக் கொண்டிராத *குடும்பங்கள்;* மேலதிக சிறுவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு வசதிகளைக் கொண்டிராத *பாடசாலைகள்;* வேலை செய்யும் சூழலிலிருக்கும் சிறுவர்களுக்கு ஆதரவளிக்கவோ அவர்களை உள்ளீர்க்கவோ திறனற்ற *ஆசிரியர்கள், நிருவாகங்கள்;* சமூக அடிப்படைச் சிறுவர் தொழில் கண்காணிப்பு உள்ளிட்ட, சிறுவர் பாதுகாப்புப் முறைமைகளுக்கு ஆதரவளிப்பதற்கான பொறிமுறையையோ தன்னிறைவையோ கொண்டிராத *சமூகங்கள்;* வேலை செய்வதற்குரிய சட்டபூர்வ வயதைக் கொண்டிருக்கும் இளையோருக்கான வேலை நிபந்தனைகளை மேம்படுத்த வேண்டிய *வேலைத்தலங்கள்;* தமது பயிற்சி விதிகளை முழுமையாகக் கொண்டிராத இளம் பயிற்சிபெறுவோரது தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய *தொழிற்பயிற்சி மற்றும் திறன்களை வழங்குவோர்;* ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்காக, கொள்கைகளிடையேயான இணக்கங்களை உறுதிப்படுத்த வேண்டிய கொள்கை *வகுப்போர்;* தமது திட்டமிடல், அமுலாக்கல், கண்காணித்தல், அறிக்கையிடுதல் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை பிரயோகிக்க வேண்டிய *சேவைகளை வழங்குபவர்கள்* போன்ற இன்னோரன்ன முகவர்கள் இவர்களுள் அடங்கினாலும், இவர்கள் அபாயங்களைக் குறைவாகவே எதிர்கொள்வர். போதுமான அறிவையும் சாதனங்களையும் தரவுகளையும் கொண்டிராத *புதிதாக உருவாகக்கூடிய சிறுவர் தொழில் நிலவரங்கள்* இதில் அடங்கும்.

## 13

# கொள்கை வகுத்தலிலுள்ள முட்டுக்கட்டைகள்

இந்தக் கொள்கை ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகள், தொகைமதிப்புப் புள்ளிவபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட “2008/09 இன் சிறுவர் செயற்பாட்டு அளவீடு” என்பதிலிருந்து பெறப்பட்டவையாகும். இந்த அளவீட்டுத் தரவுகள் உண்மையான நிலவரத்திலிருந்து மாறுபட்டவையாக இருக்கக்கூடும். இந்த அளவீட்டிலிருந்தான சிறுவர் குடித்தொகை 5 - 17 வயதுகளுக்கு இடைப்பட்ட சிறுவராவர். 4,338,709 பேராகவுள்ள அவர்களில் 2.5% ஆனோர் சிறுவர் தொழிலில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்பட்ட, 5 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்டோரே ‘சிறுவர் தொழிலில்’ உள்ளதாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் 1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவரைத் தொழிலிலமர்த்துதல் தொடர்பான சட்டத்தின் வரைவிலக்கத்தின் பிரகாரம் முகத்தோற்ற அளவில் ஒத்துப்போகாத நிலையில் உள்ளது. ஏனெனில், அச்சட்டத்தில் சிறுவர் என்பது “14 வயதுக்கு உட்பட்ட ஓர் ஆள்” என வரையறுக்கப்பட்டுள்ளது. அளவீட்டிலுள்ள இந்த அடிப்படையான தவறு பிழையான மதிப்பீட்டைத் தருவதுடன், எதிர்வரும் காலங்களில் நடாத்தப்படும் அளவீடுகளில் திருத்தப்பட்டு, உண்மையான சிறுவர் தொழில் எண்ணிக்கையை தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

## 14

# கால அளவு

சிறுவர் தொழில் பற்றிய இந்த தேசியக் கொள்கையின் அமுலாக்கமானது அதன் இலக்குகள் எய்தப்படும்வரை தொடர்ச்சியானதாக இருக்கும் என்பதுடன், சிறுவர் தொழிலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு கருதினால், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் அது நாளதுவரைப் படுத்தப்படவோ, அல்லது பொருத்தமான வகையில் திருத்தப்படவோ முடியும்.



# இணைப்பு I

பிரதான தேசிய சட்டங்களின் மேலோட்டமான தொகுப்பும் அவற்றை அமுல்படுத்துவதற்கு ஆணையைக் கொண்டுள்ள அமைச்சுகள் / திணைக்களங்கள்

| தேசிய சட்டங்கள் | சட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஆணையைக் கொண்டுள்ள அமைச்சுகள் / திணைக்களங்கள் | சிறுவர் தொழிலின் மேமாசமான வடிவங்களுக்கு உள்ள தொடர்பு |
|---|---|---|
| • 1956 இன் 47 ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவரைத் தொழிலிலமர்த்துதல் தொடர்பான சட்டம்<br>• அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் - வர்த்தமானி இல: 1695/32 திகதி: மார்ச் 2011 | தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு | அதன் தன்மையால் அல்லது அது மேற்கொள்ளப்படும் சூழல் காரணமாக, அவ்வேலை சிறுவரது ஆரோக்கியம், பாதுகாப்பு, அல்லது ஒழுக்கத்தைப் பாதிக்கும். |
| • 2006 இன் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தப்பட்டது) சட்டம் - பிரிவு 385A | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபதி திணைக்களம் | பிள்ளைகளை விற்றல் அல்லது ஆட்கடத்தல் போன்ற (எல்லா வகையான), வற்புறுத்தி அல்லது கட்டாயமாக சிறுவரைத் தொழிலில் அமர்த்துதல்.<br>சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல். |
| • 2006 இன் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தப்பட்டது) சட்டம்<br><br>பிரிவுகள் 358 - 360A, 360B, 360C, 360(D), 288A | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபதி திணைக்களம் | விபச்சாரத்திற்காக, பாலியல்ரீதியான சலனப்படங்களை உருவாக்கும் நடவடிக்கையில் அல்லது அவ்வாறான படங்களில் நடிப்பதற்கு சிறுவரைப் பயன்படுத்துதல் |
| • 2006 இன் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தப்பட்டது) சட்டம் - பிரிவு 360(C) குற்றத்தை 'சட்டத்தின் கீழ் ஏதேனும் வேறு சட்டத்தால் கூறப்படும் ஒரு குற்றம்' என்பதற்கு விரிவுபடுத்துகிறது.<br>• குற்றவியல் சட்டக்கோவை | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொலிஸ் திணைக்களம், சட்டமா அதிபதி திணைக்களம் | சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு, குறிப்பாக போதைப்பொருட்களைத் தயாரிப்பதில் அல்லது அவற்றைக் கடத்துவதில் ஈடுபடுத்துதல். |
| • பிள்ளைகளைத் தத்தெடுத்தல் தொடர்பான கட்டளைச்சட்டம் | மகளிர் விவகார, சிறுவர் அபிவிருத்தி அமைச்சு / நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் | (எல்லா வகையான) சிறுவரது ஆட்கடத்தல் |
| • கல்விக் கட்டளைச்சட்டம் / பாடசாலைக்குக் கட்டாயமான வரவு (2006) | கல்வி அமைச்சு | எல்லா வகையான தடைகள் மற்றும் கல்வி பற்றிக் கவனஞ் செலுத்துகிறது. |
| • சிறுவர் மற்றும் இளம் ஆட்களின் கட்டளைச்சட்டம் | மகளிர் விவகார, சிறுவர் அபிவிருத்தி அமைச்சு | கவனிப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய எல்லா வடிவங்களையும் உள்ளடக்குகிறது. |




தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு
த.பெ 1519, 2வது மாடி,
தொழில் செயலகம், நாரகன்பிட, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி - 011 2368609
தொலைநகல் - 011 2368609
www.labourmin.gov.lk